Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 02 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 03 (18.10.2004) திங்கட்கிழமை இதழ்: 18

விரைவு பாதுகாப்பு

FedEx Express®

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Cylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ..ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

## மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க

# ஆக்கபூர்வமான முயற்சி எதனையும் அரசாங்கம் இதுவரை எடுக்கவில்லை!



## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(லண்டன்)

பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான முயற்சிகளையும் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக அரசாங்கம் இது வரை மேற்கொள்ளவில்லை.

இது தற்போதுள்ள நெருக்கடியான நிலைமை என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றிரவு பி.பி.சிக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

அந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது –

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேக்கு அரசாங்கம் அழைப்பு

# அடுத்த மாதம் முதல் வாரத்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாம்!

## அரச சார்புப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான சமாதானத் தூதுக்குழுவிடம் ஜனாதிபதி செயலகம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் -

அடுத்த மாதம் முதல் வாரத்தில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் இருப்ப

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தம் ஏற்படாவிடின்

## பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வலியுறுத்த

தாவது –

(12 ஆம் பக்கம் பார்க்க)

சன் தலைமையிலான சமாதானத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்தம் ஏற்படாவிடின் நிலைமை மோசமாகியிருக்கும்!

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

போர்நிறுத்தம் ஒன்று ஏற்படாதுவிட்டால் நாட்டின் நிலைமை கவலைக்கிடமானதாகியிருக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

எமது நாட்டை பின்னகர்த்த வேண்டிய தேவையில்லை. நாட்டின் நிலை மோசமடைந்த நிலையிலேயே போர்நிறுத்த ஒப்பந்தம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வலியுறுத்த கனடிய நாடாளுமன்ற தூதுக் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்!

கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றும், வர்த்தகப் பிரமுகர்கள் குழுவொன்றும் இந்த வருட இறுதியில் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ள விருப்பதாகத் தெரியவருகிறது.

இலங்கையில் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரையும் வலியுறுத்தும் நோக்கிலேயே இந்தப் பயணம் அமையவுள்ளதாக கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் மரியா மின்னா தெரிவித்தார்.

அண்மையில் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து நேற்று முன்தினம் கனடாவின் ஊடகங்களுக்கு விளக்கமளிப்பதற்காக நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மரியா மின்னா இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை செல்லவுள்ள குழுவில், கனடாவின் தேசிய அளவிலான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், வர்த்தகப் பிரமுகர்களும் இடம்பெறுவார்கள்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதுடன், பொருளாதார ரீதியில் வளர்ச்சியை எவ்வாறு ஏற்படுத்த முடியும என்பது குறித்து இந்தப் பயணத்தின் போது இந்தக் குழு கலந்துரையாடவுள்ளது.

இலங்கைக்கான இந்தப் பயணத்தின்போது இரு தரப்பினரையும் சந்திப்பதற்கு நான் தயாராக உள்ளேன். கடந்த தடவை கனடாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பில் கிரகாம் இலங்கைக்குச் சென்றபோது விடுதலைப் புலிகள் தரப்பைச் சந்திக்காதது போல் இம்முறை நான் செய்யப்போவதில்லை.

விடுதலைப் புலிகளையும், அரச தரப்புப் பிரதிநிதிகளையும் சந்திக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமைதிப் படையினரை அனுப்பி கையைச் சுட்டுக்கொண்டதை நாம் இன்னும் மறக்கவில்லை!

## முன்னாள் இந்தியப் பிரதமர் தெரிவிப்பு



(புதுடெல்கி)

இலங்கைக்கு இந்திய அமைதிப் படையை அனுப்பியதன் மூலம் ஏற்கனவே எமது கைகளைச் சுட்டுக் கொண்டதை நாம் மறக்கவில்லை என்று முன்னாள் இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சரியான கொள்கைகள் முன்கொண்டு செல்லப்படுவது அவசியமாகும்.

எனது பழைய நண்பரான ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தது மிகுந்த மகிழ்வைத் தரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு - புதுநகரில் உறக்கத்திலிருந்த இளைஞன் கிரனேட் தாக்குதலில் உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - புதுநகரில் நேற்று அதிகாலை வீடொன்றின் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில், உறக்கத்திலிருந்து 26 வயது இளைஞர் கொல்லப்பட்டார்.

ரஞ்சித் எனப்படும் குமாரசூரியம் மகேஸ்வரன் என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்து அண்மையில் விலகிய இவர், மத்திய கிழக்கு நாடொன்றுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்லவிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் உறக்கத்திலிருந்த சமயம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இவரது அறைக்குள் கூரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக

# ஜப்பானியத் தூதுவர் அகாஷி மீண்டும் இலங்கை வருகிறார்!

(ரோக்கியோ)

இலங்கை அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் கூடிய விரைவில் மீளவும் சமாதானப் பேச்சு மேசைக்குக் கொண்டு வருவது குறித்த நகர்வுகளை மேற்கொள்வதற்காக ஜப்பானின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

சமாதான முயற்சிகள் குறித்து ஆராய்வதற்காகவே இவர் கொழும்புக்கு விஜயம் செய்ய விருப்பதாக ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு வரவுள்ள இவர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போஏயர் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# வன்னி நிலப்பரப்பில் உந்துருளி வாணிபத்தில் முன்னணி வகிக்கும் சிவகுரு கட்டடப்பொருள், உந்துருளி வாணிபத்தார்

நவீன UMAZAKI காட்சி அறை ஒன்றினை இன்று (18.10.2004) திங்கட்கிழமை கோலாகலமாக திறந்து வைக்கின்றனர்






திறப்புவிழாவை முன்னிட்டு 31.10.2004 வரை
விசேட சலுகையாக -

- வரி உட்பட கொழும்பு விலையிலே விற்பனை செய்யப்படும்.
- 2 தலைக்கவசம், 2 மழைக்கவசம், மூன்று கணனி முறையிலான இலவச பராமரிப்பு.
- பதிவுச் சான்றிதழ்கள் 1 வாரத்தில் பெற்றுக் கொடுக்கப்படும்.



இலகுவான முறையில் தவணைக் கட்டணத்தில் உமாசாக்கி
மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வோருக்கு St. Anthony's Consolidated Ltd. நிறுவனத்தால்
வங்கிக் கடன் ஒழுங்குகள் செய்து தரப்படும்

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

உமாசாக்கி மோட்டார் சைக்கிள்களுக்கான வடபகுதி ஏகவிநியோகஸ்தர்

## சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்

A-9 சாலை, பரந்தன்.

# ஜேர்மனியின் முக்கிய நகரங்களில் நினைவு எழுச்சிநாள் நிகழ்வுகள்

## பாலகுமாரனும் பங்கேற்பு

(பேர்லின்)

**ஜேர்மனியின் பல்வேறு நகரங்களிலும் 2 ஆம் லெப். மாலதி, மற்றும் பன்னிரு வேங்கைகளை நினைவுகூரும் வகையில் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றன.**

**எழுச்சி நிகழ்வுகள் 8 ஆம் திகதி பேர்ளின் நகரிலும், 9 ஆம் திகதி சுற்காட் நகரிலும், கொற்றிங்கன் நகரிலும், 10 ஆம் திகதி எசன் நகரிலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.**

பேர்ளின் நகரில் நடைபெற்ற நிகழ்வில் 400 இக்கும் மேற்பட்ட மக்கள் எழுச்சியுடன் கலந்துகொண்டனர்.

சுற்காட் நகரில் நடைபெற்ற நிகழ்வில், 900 இக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

பேர்ளின் நகரில் - தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் கா.வே.பாலகுமாரனும், சுற்காட், எசன் ஆகிய இடங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஜேர்மனிக்கிளை மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் வசந்தி மனோகரன், கொற்றிங்கன் நகரில் முதலாவது மாவீரர் லெப்.சங்கரின் சகோதரர் செல்வச்சந்திரன் சிறீதர் ஆகியோர் ஏற்றினர்.

அகவணக்கம், சுடர் வணக்கங்களைத் தொடர்ந்து எழுச்சி நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. பேர்ளின், சுற்காட், எசன் ஆகிய இடங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் சிறப்புரையாற்றினார். அத்துடன், வே. பாலகுமாரின் ஜேர்மனிக் கிளையின் மகளிர் அமைப்பினரின் இசைக்குழுவுக்கு மேஜர் பாரதி இசைக்குழு எனப் பெயர் சூட்டி, கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தார்.

வே.பாலகுமாரன் தனது உரையில் -

தற்போதைய அரசியல் நிலமைகள் தொடர்பாகவும், ஜேர்மனி வாழ் தமிழ் மக்களுக்குத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சொல்லிவிட்ட செய்தியையும், தாயகம் புலம் பெயர் மக்களிடம் எதிர்நோக்கும் தேவையையும் எடுத்துரைத்ததுடன், அரசாங்கம் சில கைக்கூலிகளுடாக எமது விடுதலைக்கு எதிராகச் செய்து வரும் பொய்ப் பிரசாரத்தைப் பற்றியும் தெளிவுபடுத்தினார். தற்பொழுது ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு, ஜேர்மனியில் வசிப்பதற்கான வதிவிட உரிமைக்கு எழுந்துள்ள பிரச்சினைக்கு அனைவரும் திரண்டு செயற்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

10 ஆம் திகதி நிகழ்வில் வெளிநாட்டு மக்களுக்காகச் செயற்பட்டுவரும் இலங்கையரான சிங்கள மொழி பேசும் விறாஜ் மெண்டிஸ், ஆங்கில மொழியில் ஜேர்மனியில் தற்போது தமிழர்களுக்கு எழுந்துள்ள (அரசியல் தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கான) பிரச்சினை தொடர்பாக தெளிவான விளக்கம் கொடுத்தார். அவரது விளக்கத்தை வே.பாலகுமாரன் அனைவருக்கும் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினார்.

10 ஆம் திகதியன்று எசன் நகரில் நடைபெற்ற நிகழ்வில், 2000 இக்கும் மேற்பட்ட மக்கள் எழுச்சியுடன் கலந்துகொண்டார்கள். தமிழ் பெண்கள் அமைப்பினர் நிகழ்வுகளை எழுச்சியுடன் முன்னெடுத்து நடாத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது.

பெண்கள் அமைப்பினரால் இளம் பெண்களை இணைத்து உருவாக்கப்பட்ட இசைக்குழு முதல் முதலாக மேடையேறியது குறிப்பிடத்தக்கது.



கடந்தவாரம் வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு விஜயம் செய்த இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட, படைநிலைகளைப் பார்வையிடுவதையும், இறணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவதையும் படங்களில் காணலாம்.

# சபாநாயகரைப் பதவி நீக்குவதற்கு ஜனாதிபதி மாளிகையில் சதித்திட்டம்!

சபாநாயகர் ஜே.எம்.லொக்கு பண்டாரவை பதவி நீக்குவதற்கான சூழ்ச்சி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்று வருவதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவரிடமே இதற்கான விசேட பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது..

மதப்பிரச்சினையை அடிப்படையாக வைத்து, ஜே.எம்.லொக்குபண்டாரவை சபாநாயகர் பதவியிலிருந்து நீக்குவதற்கு சூழ்ச்சி நடைபெறுவதாகவும், இது குறித்து சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளோர் கலந்துரையாடியதாகவும் தெரியவருகிறது.

இந்தக் சூழ்ச்சிக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார். சபாநாயகரை விலக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டால், அதற்கு ஆதரவாகத் தான் வாக்களிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனால், ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரினதும் ஆதரவைப் பெறுவது அவசியமாகின்றது. லொக்கு பண்டாரவை நீக்குவதனால் ஏற்படும் சபாநாயகர் பதவிக்கு அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றி, அதனூடாக ஜனாதிபதி சந்திரிகாவை நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமராக நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வருவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகள் தயாரிப்பது இவர்களது எதிர்பார்ப்பாகவுள்ளது.

இதன்படி இதற்குப் பொறுப்பாகவுள்ள ஜனாதிபதியின் ஆலோசகர்-கடந்த சில நாட்களாக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரோடும் மற்றும் அமைப்புக்களோடும் கலந்துரையாடியுள்ளார்.

# சமாதான முயற்சிக்கு ஒஸ்ரியா மத்தியஸ்தம்!

## கத்தோலிக்க மதகுரு கோரிக்கை

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் ஒஸ்ரியாவை மத்தியஸ்தம் வகிக்குமாறு இலங்கையைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுரு ஒருவர் அழைப்பு விடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஒஸ்ரியாவுக்கு விஜயம் செய்துள்ள கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த வண.ஒஸ்வெல்ட் பேத் அடிகளாரே வியன்னாவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் ஒஸ்ரியா அங்கம் வகித்தாலும், ஒஸ்ரியாவின் மத்தியஸ்த பணியை இலங்கை அரசு ஏற்கும் என்பதாகும். இந்த நாடு இப்பணிக்குத் தகுதியானதென அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தப் பணியை வகிக்கும் நோர்வே மீது சிங்கள இனவாதிகள் மத்தியிலிருந்து பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்துவிடுவதாலேயே ஒஸ்ரியாவை இந்தப்பணியி லீடுபட வேண்டும் எனவும் அவர் மேலும் கோரியுள்ளார்.

# அம்பாந்தோட்ட துறைமுகம் சீன உதவியுடன் அபிவிருத்தி!

## இரண்டு வாரங்களுக்குள் ஆரம்பம்

சீன அரசாங்கத்தின் பங்களிப்புடன் அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைக்கும் பணி அடுத்த இரண்டு வாரங்களுக்குள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக இலங்கைத் துறைமுக அதிகாரசபைத் தலைவர் திலீப் விஜேயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

அம்பாந்தோட்டை ஒரு இயற்கையான துறைமுகம். கரையிலிருந்து சில மீற்றர் தூரப் பகுதியை ஆழப்படுத்தினால் பாரிய கப்பல்கள் இலகுவில் வர வழியேற்படும். முன்னைய காலங்களில் சீனாவிலிருந்து பயணம் செய்த கப்பல்கள் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் தரித்துச் சென்ற சான்றுகள் கிடைத்துள்ளன.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் சிங்கப்பூரைவிடவும் முக்கியதுவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இலங்கையில் 2 ஆவது பாரிய துறைமுகமாக அம்பாந்தோட்டைத் துறைமுகம் உருவாகுவதற்கு சிங்கப்பூர் இலங்கைக்குப் பெரிதும் அவநம்பிக்கையை ஏற்படுத்தி வந்தது.

ஆனால், சீன அரசின் உதவியுடன் இந்தத் துறைமுகத்தை விருத்தி செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருககின்றன. அடுத்த இரு வாரங்களுக்குள் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும். இப்போதிருக்கும் வசதிகளை மேலும் அதிகரிப்பதுடன் அங்கு நவீன இறங்குதுறை வசதிகளும் ஏற்படுத்தப்படவிருக்கின்றது.

இந்தப் பணிகளுக்கு குறைந்தது. 100 மில்லியன் ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இதேவேளை, காங்கேசன்துறை, திருகோணமலை ஆகிய துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஆயினும் திருகோணமலைத் துறைமுகப் புனரமைப்புக்குப் பாதுகாப்புறுதி வழங்கப்படாததால் இப்பணிகள் காலதாமதமடைவதாக அவர் மேலும தெரிவித்தார்

# நிழல் அமைச்சரவையை கலைக்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் உத்தரவு!

## கட்சிக் குழப்பமே காரணமாம்

(கொழும்பு)

'நிழல்' அமைச்சரவையில் பதவிகள் ஒதுக்குவதால் எழுந்த சிக்கல்கள் காரணமாக - அதை உடனடியாகக் கலைத்துவிடுமாறு ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க வுக்கு, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருப்பதாகக் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து. மேலும் தெரிய வருவதாவது -

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மகிந்த சமரசிங்க மற்றும் எஸ்.பி. திஸநாயக்க ஆகியோரின் தலைமையில் நிழல் அமைச்சரவையை அமைத்திருந்தது.

இந்த நிழல் அமைச்சரவையில் அமைச்சுப் பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டதில் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

முன்னர் சமுர்த்தி அமைச்சர் பதவியை வகித்து வந்த எஸ்.பி.திஸநாயக்கவுக்கு நிழல் அமைச்சு ஒதுக்கப்படவில்லை. அது இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

முன்னர் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சராக இருந்த மகிந்த விஜேசேகரவுக்கும் இந்தப் பொறுப்பு வழங்கப்படாததுடன், தனியே புள்ளிவிபரத்தரவுகளைச் சேகரிக்கும பொறுப்பே வழங்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை - புதிதாக இந்த முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவான அத்துல விராஜ் காரியவசத்துக்கு இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு ஒதுக்கப்பட்டிருப்பினும், முன்னர் அமைச்சராக இருந்த சாகர ரத்நாயக்காவுக்கு எந்தவொரு அமைச்சுப் பொறுப்பும் அளிக்கப்படவில்லை.

இந்தப் பெறுப்புக்கள் பகிர்வில் ஏற்பட்ட பிரச்சினைகளால், கட்சிக்குள் நெருக்கடிகள் ஏற்பட்டதால் இந்த நிழல் அமைச்சரவையைக் கலைக்குமாறு மகிந்த சமரசிங்கவுக்கு எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருப்பதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

## தேசிய அடையாள அட்டைகள்

# துரிதமாக வழங்குவதற்கு புதிய கருமபீடம் அமைப்பு

(கொழும்பு)

துரித கதியில் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட நடவடிக்கைத் திட்டமொன்று எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பி.பி.அபேகோன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி வாக்காளர்கள் அனைவருக்கும் அடுத்த ஆறு மாத காலத்துக்குள் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படவேண்டும். சுமார் 25 லட்சம் வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டைகள் இல்லாத நிலையிலுள்ளனர்.

இவர்களுக்குத் துரித கதியில் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கைத் திட்டமொன்று எதிர்வரும் டிசம்பர் 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கென 150 புதிய கணினிகள் கொண்ட கருமபீடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. அத்துடன் 15 புதிய அலுவலர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அடுத்த 12 மாதத்துக்குள் 25 லட்சம் பேருக்குத் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நடுவானில் விமானத்தில் குழப்பம்; ஒன்பது பயணிகள் சிறுகாயம்!

(அம்மான்)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஜோர்தானுக்குப் புறப்பட்டுச் சென்ற விமானத்தில் நடுவானில் ஏற்பட்ட திடீர் குழப்பநிலையால் ஒன்பது பயணிகள் சிறுகாயம் அடைந்ததாகத் தெரியவருகிறது.

இதுதொடர்பாக ஜோர்தானின் றோயல் விமான சேவை அதிகாரிகள் தகவல் வெளியிடுகையில் -

றோயல் ஜோர்தான் எயர்பஸ் 310 விமானம் கடந்த வெள்ளிக்கிழமை 173 பயணிகளுடன் கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து புறப்பட்டது.

விமானநிலையத்திலிருந்து புறப்பட்ட 70 நிமிட நேரத்தில் திடீரென விமானத்துக்குள் குழப்பநிலை ஏற்பட்டது.

ஜோர்தான் உள்ளூர் நேரப்படி காலை 6.15 மணிக்குக் குழப்பநிலை ஏற்பட்டபோது விமானம் 34 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தது.

அந்தக் குழப்பநிலையால் எவருக்கும் பாரிய காயங்கள் ஏற்படாததால் விமானத்தைத் தொடர்ந்து ஜோர்தான் நோக்கிச் செலுத்த விமானி தீர்மானித்தார்.

இந்தக் குழப்பநிலையால் 6 பயணிகளும், 3 விமான சிற்பந்திகளும் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் ஜோர்தான் குயீன் அலியா விமானநிலையத்தில் 10.45 இற்கு விமானம் தரையிறக்கப்பட்டதையடுத்து வைத்திய சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

### அவுஸ்ரேலியாவுடனான

# இரண்டாவது டெஸ்ட்டில் வெற்றிபெற இந்திய அணிக்கு பிரகாசமான வாய்ப்பு



(சென்னை)

அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான இன்று - இந்திய அணி வெற்றி பெறுவதற்கு பிரகாசமான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

141 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்த அவுஸ்ரேலிய அணி, 2 ஆவது இனிங்சில் நேற்றுமுன்தினம் 3 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது. மார்ட்டின் 19 ஓட்டங்களுடனும், ஜிலெஸ்பி ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஆடிக்கொண்டிருந்தனர்.

நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. மார்ட்டினும் ஜிலெஸ்பியும் தொடர்ந்து ஆடினார்கள்.

ஆட்டம் தொடங்கிய 40 ஆவது நிமிடத்தில் அவுஸ்ரேலியா 24 ஓட்டமே எடுத்தது. நேரம் செல்லச் செல்ல மார்ட்டின் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். அவர் கும்ளே வீசிய ஓவரில் அடுத்தடுத்து 2 பவுண்டரி அடித்தார். இதன் மூலம் அவர் அரைச் சதத்தைத் தொட்டார். இது அவரது 18 ஆவது அரைச் சதம் ஆகும்.



அவர் 111 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்கள் எடுத்தார்.

மறுமுனையில் இருந்த ஜிலெஸ்பி தடுத்து ஆடி இந்திய பந்து வீச்சாளர்களைத் திணறடித்தார். இந்த ஜோடியைப் பிரிக்க கங்கூலி பந்து வீச்சுமுறையில் பல மாற்றங்கள் செய்தார். ஆனால், பலன் இல்லாமல் போனது. அவுஸ்திரேலியா 4 விக்கெட் இழப்பிற்கு 230 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மார்ட்டின் 67 ஓட்டங்களுடனும் ஜிலெஸ்பி 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

உணவு இடைவேளைக்கு பிறகு மார்ட்டினும், ஜிலெஸ்பியும் தொடர்ந்து ஆடினார்கள்.

ஹர்பஜன்சிங் வீசிய பந்தை ஜிலெஸ்பி அடித்தார். அது அவரிடமே பிடியாக மாறியது. ஆனால் அதை அவர் தவறவிட்டார். மேலும் அதே ஓவரில் மீண்டும் பிடிதவறிப்போனது.

ஒருபுறமும் மார்ட்டின் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட, மறுமுனையில் ஜிலெஸ்பி பந்தைத் தடுத்து ஆடினார். இதனால் அந்த அணி 91.4 ஓவரில் 250 ஓட்ட்ங்களைத் தொட்டது. அப்போது மார்ட்டின் 80 ஓட்டங்களுடனும், ஜிலெஸ்பி 18 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருந்தனர்.

ஹர்பஜன்சிங் வீசிய ஓவரில் மார்ட்டின் 2 பவுண்டரிகள் அடித்தார். இதன்மூலம் அவர் 96 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து கும்ளே வீசிய ஓவரில் சிக்ஸர் அடித்து சதம் அடித்தார். இது அவரது 8 ஆவது சதமாகும். அவர் 204 பந்துகளில் - 11 பவுண்டரி ஒரு சிக்ஸருடன் சதத்தைக் கடந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 278 ஆக இருந்தது. தேனீர் இடைவேளைக்கு முன்பு ஹர்பஜன்சிங் வீசிய ஓவரில் இந்த ஜோடி பிரிந்தது.

104 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மார்ட்



டின் ஹர்பஜன்சிங் பந்துவீச்சில் டிராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதே ஓவரில் ஜிலெஸ்பியும் 26 ஓட்டங்களில் டிராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இவர்கள் இருவரும் 5 ஆவது விக்கெட்டிற்கு 139 ஓட்டங்கள் சேர்த்தனர்.

அடுத்து 7 ஆவது விக்கெட் ஜோடியாக கிளார்க்கும், லீமெனும் களமிறங்கினார்கள். இருவரும் ஒருநாள் ஆட்டம்போல் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இதனால், ஓட்ட விகிதம் அதிகமாகி 300 ஓட்டங்களைத் தொட்டது. 31 ஓட்டங்கள் எடுத்த நிலையில் லீமென், கும்ளேயின் பந்தில் பட்டேலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கஸ்பரோவிச்சும், கும்ளேயின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். அவர் 5 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்.

அடுத்துக் கடைசி விக்கெட்டாக வந்த மக்ரா 2 ஓட்டங்களில் ஹர்பஜன்சிங்கின் பந்தில் போல்ட் ஆனார்.

அவுஸ்ரேலியா 2 ஆவது இனிங்ஸில் 369 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. கிளார்க் கடைசிவரை ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களை எடுத்தார்.

இந்தியா தரப்பில் கும்ளே 6 விக்கெட்டுக்களும், ஹர்பஜன் 3 விக்கெட்டுக்களும், சகீர்கான் ஒரு விக்கெட்டும் எடுத்தனர். இதனால், இந்தியா 229 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி பெறும். நேற்றைய ஆட்டத்தில் 3 ஓவர் மீதியிருந்ததால் இந்தியா 2 ஆவது இனிங்ஸைத் தொடங்கியது.

யுவராஜ்சிங்கும், ஷேவாக்கும் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினார்கள். முதல் ஓவரை மக்ரா வீசினார். இந்த ஓவரில் 9 ஓட்டங்கள் சேர்த்தனர். அடுத்து 3 ஆவது ஓவரை வீசவந்த மக்ரா பந்தில் சேவாக் 2 பவுண்டரி அடித்தார்.

ஆட்ட முடிவில் இந்தியா 3 ஓவரில் விக்




கெட் இழப்பின்றி 19 ஓட்டங்களை எடுத்துள்ளது. யுவராஜ்சிங் 7 ஓட்டங்களுடனும், ஷேவாக் 12 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர். இந்தியா வெற்றிபெற இன்னும் 210 ஓட்டங்களை எடுக்கவேண்டும்.

## டேவன் போர்ட் மீண்டும் முதலிடத்தைப் பெற்றார்!



(மாஸ்கோ)

உலகின் ரெனிஸ் வீராங்கனைகள் பட்டியலில் முதலிடத்தை ஐந்தாவது முறையாக மீண்டும் கைப்பற்றினார் அமெரிக்காவின் டேவன் போர்ட்.

ரஷ்யாவிலுள்ள மொஸ்கோ நகரில் கிரெம்ளின் கிண்ண ரெனிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் இரண்டாம் சுற்றுப் போட்டியில் டேவன் போர்ட் 6:4, 6:2 என்ற நேர்செட்களில் ரஷ்யாவின் தினரா சபினாவை வென்று காலிறுதிக்கு முன்னேறினார். இதன் மூலம் மீண்டும் ஒருமுறை இவர் உலகின் முதலாவது இடத்தைக் கைப்பற்றியுள்ளார்.

அடுத்த வாரம் அறிவிக்கப்படும் பட்டியலில் டேவன்போர்ட், பிரான்சின் அமெலி மௌரஸ்மோவை (தற்போது முதல் இடத்தில் இருப்பவர்) பின்னுக்குத் தள்ளி இந்தப் பெருமையைப் பெறுவார்.

இதற்கு முன் டேவன்போர்ட் கடந்த 2002, ஜன.13 இல் முதலாவது இடத்தில் இருந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் முதல் இடத்தைப் பிடித்துள்ளார் டேவன் போர்ட்.

# விளையாட்டு

## புதுடெல்கி பொலிஸாருக்கு கிப்ஸ், போயே விளக்கம்!

(தென்னாபிரிக்கா)

சூதாட்ட விவகாரத்தின்போது, புது டெல்கி பொலிஸார் கேட்ட கேள்விகளுக்கு தென்னாபிரிக்க வீரர்களான கிப்ஸ் மற்றும் போயே ஆகியோர் பதில் அளித்துள்ளனர்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வந்தபோது, சூதாட்டப் பிரச்சினை பூதாகரமாக வெடித்தது. இது தொடர்பாக டெல்கி பொலிஸ் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்த ஆண்டு இறுதியில் தென்னாபிரிக்க அணி இந்தியா வரும்போது, சூதாட்டத்தில் குற்றம் சாட்டப்பட்ட கிப்ஸ், போயே ஆகியோரிடம் டெல்கிப் பொலிஸார் விசாரணை நடத்துவார்கள் என்று செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில் சூதாட்ட விவகாரத்தில் டெல்கிப் பொலிஸ் கேட்ட கேள்விகளுக்கு கிப்ஸ் மற்றும் போயே ஆகியோர், பதில் அளித்துள்ளனர்.

இந்தப் பதில்கள் டெல்கிப் பொலிஸுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை கூறியது.

கிப்ஸ் மற்றும் போயே ஆகியோர் இந்தியப் பொலி ஸாரால் கைது செய்யப்பட மாட்டார்கள் என்ற உறுதிமொழி கிடைத்தால்தான் சம்பந்தப்பட்ட வீரர்கள் இந்தியா வருவார்கள் என்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட்சபை குறிப்பிட்டுள்ளது.



பாகிஸ்தானில் நடைபெற்ற பாக்ரெல் முக்கோணத் தொடருக்கான இறுதிப் போட்டியில் - பாகிஸ்தானை வீழ்த்திய இலங்கை அணி வீரர்கள் வெற்றிக் கிண்ணத்துடன் நிற்பதைக் காணலாம்.

## பாகிஸ்தானுடனான டெஸ்ட் இலங்கை அணி அறிவிப்பு!

(கொழும்பு)

பாகிஸ்தான் அணியுடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் ஆடவுள்ள இலங்கை அணி வீரர்கள் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் திலகரட்ண டில்சான் சேர்க்கப்படவில்லை.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை அணி, பாக்ரெல் முக்கோணத் தொடரில் விளையாடி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

இதனையடுத்து, இலங்கை அணி இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பாகிஸ்தானுடன் விளையாடவுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி பைசலாபாத் நகரில் ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது டெஸ்ட் எட்டு நாட்கள் கழித்து கராச்சியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளுக்காக இலங்கை அணியில் திலகரட்ண டில்சானுக்கு இடமளிக்கப்படவில்லை. இவர் கடந்த 10 டெஸ்ட் போட்டிகளில் ஆகக்கூடியது 35 ஓட்டங்களையே பெற்றுள்ளார்.

தேர்வாளர்கள் இலங்கை அணியில் மூன்று இளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு இடமளித்துள்ளனர். ஜெகான் முபாரக், இயன் டானி யல், திலின கண்டம்பி ஆகியோரே அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை அணியில் இடம்பெற்றுள்ள 15 வீரர்களின் விபரம் வருமாறு -

மாவன் அத்தப்பத்து, சனத் ஜெயசூரிய குமார் சங்கஹார, மகேல ஜெயவர்த்தன, திலான் சமரவீர, ஜெகான் முபாரக், இயன் டானியல், திலினகண்டம்பி, றொமேஷ் களுவிதாரண, உபுல்சந்தன, சமிந்தவாஸ், பர்வேஸ் ம:ரூப், லசித மாலிங்க, டில்ஹார பெர்னாண்டோ, ரங்கன ஹேரத்.

## தென்னாபிரிக்க பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகினார்

(டர்பன்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி பயிற்சியாளர் எரிக் சைமன்ஸ் பதவிவிலகியுள்ளார்.

சமீப காலங்களில் தென்னாபிரிக்கா மோசமாக விளையாடி வருவதையடுத்து சைமன்ஸ் இந்த முடிவை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையில் தென்னாபிரிக்காவுக்கு கிடைத்த தோல்வி குறித்தும், ஐ.சி.சி சம்பியன் கிண்ணத்தில் மோசமாக விளையாடியது குறித்தும் கடும் கண்டனங்கள் எழுந்தன. இதையடுத்து இந்த முடிவை அவர் மேற்கொண்டுள்ளார்.

ஸ்ரீவ்வோ, ஜெவ் மார்ஷ், டொம் மூடி ஆகியோரில் யாராவது புதிய பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தியத் தொடருக்கு மட்டும் முன்னாள் டெஸ்ட் ஆட்டக்காரர் ரே ரென்னிங்ஸ் நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

சைமன்சின் விலகலையடுத்து தேர்வுக் குழு அமைப்பாளர் ஓமர் ஹென்றியின் பதவிக்கும் ஆபத்து எழுந்துள்ளது.

# தையல் பயிற்சி நிலையம் நெடுந்தீவில் திறந்து வைப்பு

நெடுந்தீவுப் பிரதேசத்தில் யேசு சபை அகதிகள் பணி நிறுவனத்தின ரால் தையற்பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்தத் தையற்பயிற்சி நிலையத்தை யேசுசபை அகதிகள் பணி நிறுவனத்தின் இயக்குனர் அருட் திரு வினியோசப் அடிகளார் திறந்து வைத்தார். இந்தநிகழ்வில் யாழ். மாவட்ட இணைப்பாளர் அருட்திரு எஸ்.ஸ்ரனி அடிகளார், நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு ஜெபநேச ரத்தினம் அடிகளார் மற்றும் அருட் சகோதரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிலவுள்ள 20 பயிற்சியாளர்களுக் கும், ஆறுமாதகால தையற்பயிற்சி யும், விழுமியக் கல்வியும் வழங்கப் படவுள்ளது. இந்தப் பயிற்சி நிலை யத்திற்குப்பொறுப்பாக அருட் சகோ தரி எற்றியன் பொறுப்பாக நியமிக் கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக் கது. (113)



யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற மாணவ தலைவர்களுக்கான சின்னம்சூட்டும் வைபவத்தின் பின், சின்னம் சூட்டப்பட்ட மாணவ தலைவர்களுடன் வித்தியாலய அதிபர், உப அதிபர், பகுதி தலைவர், மாணவ தலைவர்களுக்கான பொறுப்பாசிரியர்கள் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (58)

# நூலக வாரத்தை அனுஷ்டிப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்க!

## மாகாண கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

(ஆழியவளை)

சர்வதேச நூலக தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகா ணத்தில் உள்ள சகல அரசாங்கப் பாடசாலைகளிலும் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நூலக வாரத்தைச் சிறந்த முறையில் கொண்டாடுவதற்குச் சகல நடவடிக்கைகளையும் மேற் கொள்ளுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

அனைத்துலக நூலகதினம் இந்தமாதம் 25 ஆம் திகதியாகும். இதேவேளை மாகாண மட்ட நூலக தினவிழா இந்த மாதம் 28 ஆம் திகதி வவுனியா தமிழ் மகாவித்தியாலயத் தில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள் ளது.

தேசிய மட்டத்திலான நூலகதின விழா அம்பாறை டி.எஸ் சேனநா யக்க மத்திய மகா வித்தியாலயத் தில் எதிர்வரும் 25 ஆம் திகதி கொண் டாடப்படவுள்ளது. இந்த நிகழ்வில் பிர தம விருந்தினராக கல்வி அமைச்சர் மங்கள சமரவீர, சிறப்பு விருந்தினராக மாகாணக்கல்வி அமைச்சின் செய லாளர் இரா.தியாகலிங்கம் ஆகி யோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் இந்த நூலக வாரத்தில் பாடசாலை அதிபர்கள் பாடசாலைக ளில் நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். அத்துடன் சிறந்த நூலகங்களும் தெரிவுசெய்யப்படு தல வேண்டும். அத்துடன் வலய மட் டத்தில நூலகதினவிழா ஒன்று கொண் டாடப்படுதல் வேண்டும் எனவும் மாகாணக்கல்விப்பணிப்பாளர் அறி வித்துள்ளார். (122)



கடந்தவாரம் நெடுந்தீவில் இடம்பெற்ற உள்ளூராட்சி வாரவிழாவின் இறுதிநாள் நிகழ்வில், முன்பள்ளிச் சிறார்களின் கலைநிகழ்வைப் படத்தில் காணலாம். (113)

# சட்டவிரோத மரம்தறிப்பு மணற்காட்டில் அதிகரிப்பு

வடமராட்சி கிழக்கு மணற்காடு, குடத்தனை ஆகிய பிரதேசங்களில் சட்டவிரோதமாக பெருமளவில் சவுக்கு மரங்கள் தறிக்கப்பட்டு அவை விறகிற்காக வடமராட்சி, தென்ம ராட்சி ஆகிய பகுதிகளுக்கு எடுத் துச்செல்லப்படுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தவிதமாக இப்பிரதேசத்தில் சட்டவிரோதமாகப் பெருமளவு மரங கள் தறிக்கப்படுவதால் இப்பகுதி யில் மண்ணரிப்பு மற்றும் பல்வேறு சூழல் தாக்கங்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

எனவே இவற்றைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (122)

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றை கணிப்பீட்டுப் புள்ளியில் சேர்ப்பு

(ஆழியவளை)

எதிர்வரும் 2005 ஏப்ரல் மாதம் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றும் மாண வர்களின் பரீட்சைப் பெறுபேறு களில் கணிப்பீட்டுப் புள்ளிகளும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளன.

மாணவர்கள் பாடசாலைமட்டக் கணிப்பீட்டில் பெற்ற புள்ளிகளை இலங்கை பரீட்சைத் திணைக்களத் திற்கு அனுப்பிவைத்தல் தொடர்பாக பூரணப்படுத்தவேண்டிய படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு வழங் கப்பட்டுள்ளன.

இதன்படி 2005 ஆம் ஆண்டுக் கான சான்றிதழ்படுத்துவதற்காக மட்டும் கல்வியாண்டு 2003/2004 இன் 12 ஆம் தரத்து 2 ஆம் முறை யும் தவணைக்குரிய புள்ளிகளை யும் 2004/2005 இன் 13 ஆம் தரத்து முதல் இரண்டாம் தவணைக்குரிய புள்ளிகளையும் சேர்த்து நான்கு தவணைகளின் புள்ளிகளைக் குறித்த புள்ளிப்பட்டியல்களில் பதிதல் வேண்டும்.

இது சம்பந்தமான செயலமர்வு கள் குறிப்பிட்ட பாடசாலை அதி பர்களுக்கு வலயக்கல்வி அலுவல கங்களினால் நடாத்தப்பட்டுவருகின் றன. (122)

## பாவனைப் பொருட்கள் அன்பளிப்பு

இந்தியாவிலிருந்து தாயகம் திரும் பியவர்களுக்கு உடுவில் பிரதேசத் தில்வைத்து பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டன. புலம்பெயர்ந்தோர் நலனகளுக்கான நிறுவனத்தால் 2004 ஏப்ரல் மாதத்திற்குப் பின் இந்தியா விலிருந்து மீளக்குடியேறியவர்களில் ஐந்து குடும்பங்களுக்கு தொழில் உபகரணங்களுடன், வீட்டுப் பாவ னைப் பொருட்களும் வழங்கப்பட் டன.

பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பயனா ளிகளுக்கான பொருட்களை புலம் பெயர்ந்தோர் நலன்காக்கும் நிறுவன அதிகாரி வழங்கினார். (91)



வட இலங்கை ஸ்ரீபரமானந்த சிறார், முதியோர் இல்லத்திற்கு புதிதாக அமைக்கப்பட்ட நூல்நிலையத்தை ஆச்சிரம தர்மகர்த்தாசபைச் செயலாளர் சிவசண்முகம் திறந்துவைப்பதையும், அருகில் தர்மகர்த்தா சபைத் தலைவர் என்.பத்மநாதனையும் படத்தில் காணலாம். (14)

# சமூக, பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் விவசாயிகளின் பிள்ளைகள் இணையலாம்

கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் இணைந்த விவசாயிகளின் பிள்ளை கள் 2004 ஆம் ஆண்டு 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்திருப்பின் அவர்களுக்கு கமத் தொழில் மற்றும் கமநலப் பாதுகாப் புச்சபை புலமைப்பரிசில் வழங்குவ தற்குத் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தில் சேர்ந்து தங் களது உறுப்புரிமையை இன்றுவரை வலுவுள்ளதாக இருக்கும் விவசாயி கள் யாழ்ப்பாண மாவட்ட கமத் தொழில் மற்றும் கமநலப் பாதுகாப் புச் சபைக் காரியாலத்தில் இதற் குரிய ஆலோசனைகளையும் விண ணப்பப்படிவத்தையும்பெற்று அத னைப் பூர்த்திசெய்து 10.11.2004 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்டக் காரியாலயத்தில் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திகதிக்குப் பிந்திய எந்த வொரு விண்ணப்பமும் மாவட்டக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

## விளையாட்டரங்கு திறந்துவைப்பு

வடமராட்சி கிழக்கு மருதங் கேணிப் பகுதியில் விளையாட்ட ரங்கு ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

போரினால் வெகுவாகப் பாதிக் கப்பட்ட இந்தக் கிராமங்களில் விளை யாட்டரங்குகள் சேதமடைந்துள்ளன. இதனால் திறந்துவைக்கப்பட்ட இவ் விளையாட்டரங்கினால் மக்களின் பொழுதுபோக்கு வசதிகள் அதிகரிக் கும் என் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விளையாட்டரங்கு மாவீரர் லெப். இசைச் சிட்டுவின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (14)

## ஆன்மீகக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலை யங்களின் அவுஸ்ரேலிய இயக்குனர் சாள்ஸ் கொக், யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையின் அனுசர ணையுடன் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆன்மீகக் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக கைலாச பதி கலையரங்களில் நடைபெற வுள்ள இந்தக் கலந்துரையாடலில் தியானம் செய்யும் முறை, அகத் தால் ஆன்மீகத்தை ஏற்படுத்தல், தனி மனித சமாதானத்தை உருவாக்கல் ஆகிய விடயங்கள் கருத்தரங்கில் இடம்பெறவுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : இ.கஷ்மி
முகவரி : பொலிகண்டி

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :-----------------------
முகவரி :-----------------------
பிறந்த ஆண்டு:-----------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------------
பெற்றோர் ஒப்பம்




குடாநாட்டிலிருந்து தென்பகுதிக்குச் சுற்றுலா சென்ற காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் சுற்றுலா வான் தம்புள்ள பகுதியில் தரம்புரண்டபோது எடுக்கப்பட்ட படம். (12)

# மருதங்கேணியில் முதியோர்தின விழா

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் முதியோர், சிறுவர் தின விழா கடந்த வெள்ளிக்கிழமை உதவி அரசாங்க அதிபர் ஆர். ஜெய சீலன் தலைமையில் உடுத்துறை மகாவித்தியாலயத்தில் நடைபெற் றது.

இந்த நிகழ்வில் இப்பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலக பிரிவுகளில இருந்து தலா ஒவ்வொரு முதியோர் தெரிவுசெய்யப்பட்டு கெளரவிக்கப் பட்டதுடன், அன்பளிப்புக்களும் வழங் கப்பட்டன. மேற்படி தினத்தை முன் னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டு ரைப் போட்டிகளில் வெற்றியீட்டிய வர்களுக்கு பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மருதங்கேணிக் கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகு நாதன, கல்விக் கழகத்தைச் சேர்ந்த சி.தாயகன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.தியாகராசா அதிபர் அ.கா.அரியகுமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (122)




# நெருங்கும் முடிவுகாலம்



பா.கார்த்திகா

இப்போது சில காலமாக எவனைப்பார்த்தாலும் பயமாக இருக்கிறது. பாரவூர்திகளைச் செலுத்திப் போகின்ற ஒருவன், சொகுசு வாகனத்தை ஓட்டிச்செல்லும் ஒருவன், உந்துருளிகளை வேகமாகச் செலுத்திக்கொண்டிருக்கும் ஒருவன், துவிச்சக்கரவண்டியில் போய்க்கொண்டிருக்கும் ஒருவன் இப்படியாக எவனைப் பார்த்தாலும் என்மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிடத் தருணம் பார்த்திருப்பதாகத் தோன்றுகிறது. எந்த நேரத்திலும் எனக்கு பாதகம் விளைவிக்கும் எதுவும் நிகழலாம். என் பயம் நியாயமானது எனும் முடிவுக்கு நீங்கள் வரலாம்.

முன்பொருகாலத்தில் ஒருநாள் எனக்கு நேர்ந்ததை நீங்கள் வாசித்தறிந்திருப்பீர்கள். அன்றையதினம் நான் வீட்டுத் தூரத்திற்குள்ளாகியிருந்தேன். நானோ சற்றும் எதிர்பாராத விதத்தில் அது நிகழ்ந்தது. அதிகாரம் செலுத்தும் ஆடவன் ஒருவன் என் வசிப்பிடம் நுழைந்து அரச சபைக்கு அழைத்துச் செல்ல வந்திருப்பதாகச் சொனனான். நான் வீட்டுத் தூரமாகியிருக்கிறேன். அதனால் வரமுடியாது என்றேன். அரச கட்டளையை அவமதித்துவிட்டதாகக் குற்றஞ் சுமத்தி என் கூந்தலைப்பற்றி வீதி வழியே கதறக்கதற இழுத்துச் சென்றான். அரச சபை நடுவே அதிகாரம் செலுத்தும் பலர் கூடிப்பார்த்து ரசித்திருக்க நான் துகிலுரியப்பட்டேன். பல யுகங்கடந்தும் இப்போது கூட நான் துகிலுரியப்படுவது தொடர்ந்துகொண்டுதானிருக்கிறது.




உங்களுக்குத் தெரியவந்திருக்கும் என் சிநேகிதி ஒருத்தி அதிகாரத்திலிருந்தவர்களின் தேரோடும் வீதியில் சிரம் சிதம்பி மரித்துப் போயிருந்தாள். அவர்களின் தேரச் சில்லுகள்தான் அவளது சிரம் மீது ஏறியிருந்தன. மிகவும் மலிவான விதத்தில் அவள் மரித்துப் போயிருந்தாள். அவளது மரணவீட்டுக்கு இன்னொரு சிநேகிதியுடன் போய்விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தேன். இருவரும் வழக்கமாகப் பிரியுமிடத்தில் பிரிந்து விட்டிருந்தோம். பிறகு நான் தனித்து வந்துகொண்டிருந்தேன். மாமிசத்துக்காக எச்சில் ஒழுக நான் வந்துகொண்டிருந்த பாதையை மோப்பம் பிடித்து வந்துசேர்ந்திருந்தன நாய்கள். நான் முதலில் நாய்களை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. இதைப் போன்று பல தடவைகள் நாய்களை எதிர்கொண்டிருக்கிறேன். முதலில் உறுமும் அல்லது குரைக்கும். இதைவிட வேறான அனுபவம் எனக்கு முன்பொரு போதிலும் வாய்த்ததில்லை. இந்தவகையில் அனுபவம் வாய்க்கையில் நின்று நிதானித்து அவைகளைக் கடந்திருக்கிறேன். கல்லெடுத்தும் எறிந்திருக்கலாம். நினைவில் வரவில்லை. ஆனால், அன்றைக்கோ அவற்றின் நகர்வு முற்றிலும் வழமைக்கு மாறாக அமைந்திருந்தது. நான் பயந்துதான் போனேன். வழிமறித்து ஒருசில நாய்கள் நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். அவற்றினது வாயிலிருந்து எச்சில் ஊறி ஒழுகிக்கொண்டிருந்தது. நான் அவற்றை நெருங்கிக்கொண்டிருக்க எதிர்பாராத விதத்தில் என்மீது பாய்ந்து கடித்துக் குதறத்தொடங்கின. நாய்கள் பெருகிக்கொண்டேயிருந்தன. எனது உடலின் ஒவ்வொரு திசுவையும் அவை புசித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். தொடர்ந்து வந்த நாட்களில் உங்களுக்கு எனது எலும்புக்கூடும், சீருடைகளும் கிடைத்திருந்தன. என்னைப் பற்றிய செய்திகளை அச்சத்துடனும் பரபரப்புடனும் வாசித்துக் கொண்டிருந்தீர்கள். இவ்வாறாகக் காலம் போய்க்கொண்டிருந்தது. பிறகொரு தினத்தில் நாய்கள் இழுத்துச் சென்று கடித்துக் குதறிய எனதுடலை மலசலகூடமொன்றிலிருந்து கண்டெடுத்ததை வாசித்துக் கொண்டிருந்தீர்கள். தொடர்ந்து என் பெண்மைக்குள் கைக்குண்டைப் புகுத்தி நான் வெடித்துச் சிதறடிக்கப்பட்ட செய்தி உங்களுக்குக் கிடைத்தது. இவ்வாறாகக் காலத்திற்குக் காலம் புதுப்புது வடிவங்களில் என்மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படுவதை அச்சத்துடனும், பரபரப்புடனும் வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். அல்லது கேள்விப்பட்டு வருகிறீர்கள். நான் பயத்துடன் உள்ளொடுங்கி வாழ்ந்து வருகிறேன். ஒவ்வோரிரவும் துர்கனவுகள் எனக்குச் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. எப்போதும் வழமையாக என் கனவுகளில் நாகங்கள் நெளிந்து கொண்டிருக்கின்றன. எல்லாத் திக்குகளிலிருந்தும் சீறிக்கொண்டே என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. அல்லது கொம்புமுளைத்த நாய்கள் வந்து கொண்டிருக்கின்றன. என்னிடமிருக்கும் மாமிசத்தை எதிர்பார்த்துக் கடைவாயிலிருந்து எச்சில் ஒழுகக் காத்துக்கொண்டிருக்கின்றன. எனது இருப்பை நிச்சயப்படுத்திக் கொள்வது எவ்விதம்?

நானும் உங்களைப் போலத்தான் இனி எல்லாம் வழமைக்குத் திரும்பிவிடும் என நம்பினேன். இத்தனை நாட்களாய் இருள் விழுங்கிவைத்திருந்த நகரில் வெளிச்சம் படரத் தொடங்கியிருக்கிறது. பறவைகள் சிறகசைத்து மிதக்கத் தொடங்கியிருக்கின்றன. ஆனால் நகரை இருள் விழுங்கி வைத்திருந்த காலத்தில் அலைந்து கொண்டிருந்தவர்களின் பார்வைக்கு விசமூட்டப்பட்டது உங்களுக்குத் தெரியுமா? எவளைப் பார்த்தாலும் இவர்களுக்கு நிர்வாணமாகத் தெரியக்கூடியதான விசம் ஊட்டப்பட்டுள்ளது. நகரில் ஒளி துலங்கிக்கொண்டிருந்தாலும் என்னைப் போன்று பலரையும் விழுங்கிவிடப் பூதங்கள் அலைந்துகொண்டிருக்கின்றன. இதனால் நான் வீதியில் இறங்கியதுமே பயம் படரத் தொடங்கிவிடுகிறது.

முன்னைய காலங்களில் என்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த வன்முறைகள் முடிவுக்கு வந்துவிட்டிருப்பதாக நீங்கள் கருதிக்கொண்டிருக்கக்கூடும். ஆனால், இன்னுமின்னும் என்னைத் தொடர்ந்து வந்துகொண்டுதானிருக்கின்றன. வெளித்தள்ளிய நாக்குகளுடன் பிரமராட்சதர்கள் என்னைப் பின்தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். சில தினங்களுக்கு முன்பாக எனக்கு நிகழ்ந்ததைச் சொல்லியாக வேண்டும். ஆள் நடமாட்டமற்ற வீதியில் வந்துகொண்டிருந்தேன். பொழுதை இருள் கௌவத் தொடங்கியிருந்தநேரம். சட்டென்று நான் முற்றிலும் எதிர்பார்த்திராத விதத்தில் எனது முன்னிலையில் பிரமராட்சதன் ஒருவன் தோன்றினான். நான் அச்சத்தில் வசப்படத் தொடங்கியிருந்ததில் வாயடைத்து நின்றேன். அவன் என்னை நெருங்கி உடலின் என்புகள் சகலதும் நொறுங்கி விடுமாப்போல இறுக்கினான். அவனிலிருந்து அழுகிய பிணவாடை எழுந்து கொண்டிருந்தது. அவனிடமிருந்த என்னை விடுவித்துக் கொள்ள முயல்வது வீண் எனத் தெரிந்தது. வீதியில் எவரோ நுழையும் சலனம் உணர்ந்தவன் என்னை விட்டுவிட்டு மாயமாய் மறைந்து விட்டிருந்தான். அந்தக் கணத்திலிருந்து என்னுடல் அனலாகக் கொதிக்கத் தொடங்கியிருந்தது. வீட்டுக்குப் போனவள் இரண்டு மூன்று நாட்களாக ஒரே கிடையாக வீட்டுக்குள் முடங்கினாள். அந்தப் பிரமராடசதன் அடிக்கடி என் கனவில் வந்து வெருட்டிக்கொண்டிருந்தான். அவனது நெற்றியில் பாக்களவு மச்சம் இருப்பது தெரிந்தது. பார்வைக்காரர் வந்து தண்ணி ஓதிப்பார்த்துவிட்டு 'நிழல்பாடு' என்று சொல்லிவிட்டுப் போனார். உடம்பு அனலாகக் கொதித்துக்கொண்டிருந்தது. அங்கங்கே கொப்புளங்கள் தோன்றி மினுங்கிக் கொண்டிருந்தன. கை, கால் முழுவதும் வலி பிடுங்கித் தின்று கொண்டிருந்தது. கண்களை மூடியவுடன் நெற்றியில் பாக்களவு மச்சமிருக்கும் பிரமராடசதன் வந்து வெருட்டினான். "தப்பிவிட்டதாக நினைக்காதை, ஒரு நாளைக்கு வளமாக அகப்படுவாய். அப்ப பார்த்துக்கொள்ளுறன்." நான் இரவு முழுக்கப் பயத்தில் வீரிட்டு அலறியதாக அம்மா சொல்லிக் கொண்டிருந்தாள் - வேதனையோடு.

என் தோழிகளில் அநேகர் என்னைப் போலவே 'நிழல்பாடு' பட்டிருப்பதாகத் தெரியவந்தது. அவர்களின் கனவிலும் பாக்களவு மச்சம் நெற்றியிலிருக்கும் பிரமராடசதன் வந்து வெருட்டிக் கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள். எப்போதாவது ஒருநாள் நாங்கள் பிரமராடசதர்களால் பீடிக்கப்பட்டு விழுங்கப்பட்டுவிடுவோம் என அஞ்சிக் கொண்டிருந்தோம். எதற்காகவும் தனித்துச் செல்வது மிகவும் ஆபத்தானதெனத் தோன்றியது.

'நிழல்பாடு' நிகழ்ந்த பின்பான நாட்களில் நான் எங்கும் தனித்துப் போய்வருவதை முற்றிலும் தவிர்த்துவந்தேன். என் தோழியரும் அதையேதான் செய்துவந்தனர். வீட்டிலுள்ளவர்கள் பிரமராடசதர்களை எதிர்கொள்ளப் பயந்து விலகியிருந்தனர். ஏனெனில் என் போன்ற சிலரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் பிரமராடசதர்களை எதிர்கொண்டு வெருட்டிவிட்டு வீடுவந்து சேர்ந்த அன்றிரவு பிரமராடசதர்கள் பின் தொடர்ந்து வந்து அவர்களைக் கூர்ந்த படைக்கலங்களால் குத்தியும் அவயவங்கள் சிலவற்றை வெட்டிக்கொண்டும் சென்றதாகக் கேள்விப்பட்டதில் அவர்கள் கிலியுற்றிருந்தனர். பிரமராடசதர்களை எதிர்கொண்டு தாக்கும் வல்லவர் எவருமில்லாததால் அவர்களுக்குக் கொம்புகள் கிளைத்துவிட்டிருந்தன. இயந்திரக் குதிரைகளை முடுக்கிக்கொண்டு இரவு பகலாக வலம்வந்துகொண்டிருந்தனர்.

என்போன்ற கன்னியர் மாத்திரம்மல்ல திருமணமான பெண்களும் பிரமராடசதர்களால் நிழல்பாடுகளுக்குள்ளாகியிருந்தனர். அவர்களின் கணவன்மார்கள் கைகட்டி, வாய்பொத்திக் கையாலாகாதவர்களாகப் பரதேசிகளைப் போன்று அலைந்து கொண்டிருந்தனர். நானும் என்போன்றவர்களும் தீர்வுக்கு மார்க்கமின்றி உளம் வெதும்பிக்கொண்டிருந்தோம்.

இறுதியில் நிழல்பாடுகளிலிருந்து விடுபடுவதற்கான மார்க்கத்தைத் தெரிவிக்குமாறு பார்வை பார்ப்பவர் ஒருவரை நாங்கள் சிலர் சந்தித்து மன்றாடினோம். எங்களது பரிதாப நிலையைக் கண்டிருந்த அவர் 'நீங்கள் உன்னதமானவரின் மறைவிலிருந்தால், சர்வவல்லவருடைய நிழலிலே தங்கினால், நீர் எம் தேவன், நீர் எம் கோட்டை, நீர் எம் அடைக்கலம், நாம் உங்களை நம்பியிருக்கிறவர்கள், நீர் உமது சிறகுகளாலேயே எங்களை மூடும்! உமது செட்டைகளின் கீழே அடைக்கலம் தாரும்! ஏனெனில், நாங்கள் வேடர்கள் விரிக்கும் கண்ணிகளுக்கும், பாழாக்கும் நிழல்பாடுகளுக்கும் தப்பமுடியாமல் தவித்திருக்கிறோம்! இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புகளுக்கும், வீதிகளில் நடமாடும் பிரமராடசதர்களுக்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்திற்கும் மிகவும் பயந்துகொண்டிருக்கிறோம் என உளமார மன்றாடுவீர்களாயின் சர்வவல்லவர் காதுக்கு உங்கள் கூப்பிடுதல் எட்டினால் தனது தூதுவர்களை அனுப்பிவைப்பார். அவரது தூதுவர்களால் மாத்திரமே பிரமராட்சதர்களைச் சங்கரிக்க இயலும்' என்றார்.

எங்களுக்கோ பார்வைக்காரர் குறிப்பிட்டிருந்த மார்க்கத்தைப் பின்பற்றுவதைவிடவும் வேறு எதுவும் தோன்றியிருக்கவில்லை. இதனால் ஒவ்வொரு இரவும் விழித்திருந்து சர்வவல்லவரை மன்றாடத் தொடங்கினோம். *எமக்கெல்லாம் பாதுகாப்புக் கூடாரமாயிருக்கிற சர்வவல்லவரே!, எம்மைச் சூழ்ந்திருக்கும் பயங்கரமான இருளை விலக்க, எம்மை அவித்துக்கொண்டிருக்கிற வெக்கையைத் தணிக்க, எம்முள் கவிந்திருக்கும் பயத்தை அகற்ற, எமக்கு நாளும் இடர்தரும் நிழல்பாடுகளைத் தவிர்க்க, எம்மைத் தொடர்ந்து கொண்டிருக்கும் பிரமராட்சதர்களைச் சங்கரித்து எம் வாழ்வு சாந்திபெற உமது தூதுவரை அனுப்பிவையும் என உம்மை மன்றாடுகிறோம்!*

எங்களது மன்றாட்டத் தோத்திரம் தொடர்ந்துகொண்டிருந்தது. ஆனால் எங்களுக்கு அநுகூலந்தருவத எந்த மாற்றமும் நிகழ்ந்திருக்கவில்லை. பிரமராட்சதர்கள் முன்னரைவிட இப்போது அதிகரித்திருந்தனர். அவர்களது கொம்புகள் இன்னுமின்னும் நீண்டுகொண்டிருந்தன. எங்களுக்கோ பய உணர்வு மேன்மேலும் அதிகரித்துக் கொண்டிருந்தது. நாங்கள் திரும்பவும் பார்வைக்காரரிடம் போனோம். 'நீங்கள் தந்திருந்த அறிவுறுத்தல்களின்படி ஒவ்வொரு இரவும் விழித்திருந்து சர்வ வல்லவரை மன்றாடி வருகிறோம். எனினும், முன்னேற்றம் தரும் வகையில் எந்த மாற்றமும் நிகழவில்லை. கொம்பு பெருத்த பிரமராட்சதர்கள் பெருகிக்கொண்டிருக்கவே செய்கின்றனர்' என நொந்தோம். மனம் தளர்ந்து விடாமல் தொடர்ந்து மன்றாடிக் கொண்டிருங்கள் ஏனெனில் சர்வவல்லவரின் காதுகள் எல்லாத்திக்குகளிலும் மிதந்து கொண்டிருக்கின்றன. உங்கள் மிதமான நிழல்பாடுகளைத் தவிர்த்து பிரமராட்சதர்கள் சங்கரிக்கு அதிசயம் நிகழ்தே தீரும் என அவர் நம்பிக்கையூட்டி அனுப்பினார். நாங்கள் வீடுதிரும்பித் தொடர்ந்தும் சர்வவல்லவரை மன்றாடத் தொடங்கியிருந்தோம். சிலநாட்கள் பிரமராடசதர்களை எச்சரிக்கும் பேரொலி காற்றில் மிதந்து மறைந்ததாகத் தகவல் கிடைத்ததில் மகிழ்ந்திருக்கத் தொடங்கினோம். எனினும் பிரமராட்சதர்கள் தங்களது மெய்யான தோற்றத்தை மறைத்து மாயத் தோற்றம் கொண்டலைவதாகத் தெரியவந்திருந்த நிலையில் எங்களது தோழியர் இருவர் மாயத் தோற்றங்கொண்டலையும் பிரமராட்சதன் ஒருவனால் நிழல்பாடுகளுக் குள்ளாகியிருந்தனர். இந்த நிலையில்தான் இப்போது எவனைப் பார்த்தாலும்

# நூல் அகம்




**நூலின் பெயர் :- முதன் முதலாய்... (கவிதைத் தொகுப்பு)**

**எழுதியவர் :- கு.வீரா**

**வெளியீடு :- தர்மேந்திரா கலையகம். (நிதர்சனம்)**

**விலை :- 90/=**

தாய் மண்ணிற்காக தனது உயிரைத் தியாகம் செய்து மாவீரர்ளாக விடுதலைப் பாதைக்கு உரம் ஊட்டியவர்கள் என்றும் வாழ்பவர்கள். இவர்கள் தியாகம் அற்புத மானது. படிக்கப்பட வேண்டியது. வருங்காலச் சந்ததிகளுக்காக எழுதப்பட வேண்டியது. கவிஞர் கு.வீராவின் "முதன் முதலாய்" என்ற பெயரைத் தாங்கிய கவிதைத் தொகுப்பு, தமிழ் மண்ணில் நிகழ்ந்த சம்பவங்களை பதிவாகியிருக்கின்றது.

மாவீரன் எப்படிப்பட்டவன், தனது உறவுகளைப் பிரிந்து, மகிழ்சிகளை இழந்து தாய் மண்ணிற்காக போராடியவன். இவனைப் பறறி "மாவீரம்" என்ற தலைப்பில் அமைந்த முதல் கவிதையில் ஒவ்வொரு வரிகளும் வித்திட்டுச் செல்கிறது.

எங்களுக்கு ஒரு தலைவன் பிறந்தான். தமிழா நாங்கள் இனி வாழ்வோம். தொண்டை வரை கயிறு இறுக்கி சொட்டுத் தண்ணீர் கூட உள்ளே புகவிடாது, காய்ந்த பரப்பில் உரம் பிடித்து, பயிர்நட்டு, நம்பிக்கை தந்து எம்மை பேசவைத்தவர் எங்கள் தலைவர். "எங்கள் வாழ்க்கை பிரபந்தம்" என்ற தலைப பில் அமைந்த கவிதை வரிகள் உண்மை யான, கற்பனை உருவகம் இல்லா கவிதையின் வரிகள் தலைவருக்கு அணிகலன்கள் சூட்டுகின்றது.

புத்தரின் வழிவந்தவனின் செயற்பாடுகள் அனைத்தையும் புத்தமதத்தின் கோட்பாட்டிற்குள் ஒப்பிட முடியாத அளவில் வீராவின் வரிகள் புத்தனை அம்மணமாக்குகின்றது. புத்தரின் மதம் செத்துக்கொண்டிருக்கிறது. என்று சொல்லும் கருவிற்குள் வரிகள் அனைத்தையும் நியாயப்படுத்தி கவிதை வரிகளில் நகர்ந்திருப்பது அனுபவித்தவனுக்கு மட்டும் "புத்தரைக் கண்டால்" என்ற தலைப்பில் அமைந்த கவிதை உண்மை நிலை நன்கு புரியும்.

வீரத்தாய்க்கு மட்டும் எல்லோரும் தனது பிள்ளைகள் தான், களத்திற்குச் சென்று எதிரியை வென்று திரும்பி வரும்போது தான் நீ என் பிள்ளை, நான் உன்னை அப்பொழுதுதான் அரவணைப்பேன் என்று தனது பிள்ளைக்கு பாலுடன் வீர உணர்வையும், ஊட்டுகின்றாள். "வீரத்தாய்" என்ற தலைப்பில் அமைந்த கவிஞரின் வரிகள் ஊறுகின்றது.

"அக்கரை மேல் அக்கறையாய்" என்ற தலைப்பில் தனது ஊரின் அவலத்தையும், "இது தான் எம் ஈழ மணித்திரு நாடு" என்ற தலைப்பில் தமிழ் பண்பாடுள்ள கலை கலாசார வீரமிக்க தமிழர்கள் நாங்கள் நிச்சயம் இழந்த மண்ணை மீட்போம் என்றும், "வேண்டும்" என்ற தலைப்பில் முழு மனித சுதந்திரம் வேண்டும் என்றும் தொடர்கின்ற கவிதைகள் மூலம் விடுதலையின் அர்த்தம் புரியும்.

"உருமறைப்பு" என்ற தலைப்பில் போராளி பகைக்கு முன்னே உருமறைப்பு எப்படி என்று சொல்லி, "கரும்புலிகள்" என்ற தலைப்பில் எவ்வளவு சாதாரணமானவன் இவனால் எப்படி முடிந்தது. என்று சொல்லும் ஒவ்வொரு வரியும் கரும்புலியை நினைக்கத் தூண்டும்."ஏக்கமுடன் என்ற தலைப்பில் கல்லறைக்கு பூவும் மாத்திரமல்ல, தமிழனும் காத்திருப்பான் என்று மறைமுகமாகச் சொல்லி கவிதை வரிகளாக மட்டுமல்ல உணர்வு வரிகளாகவும் நகர்கின்றன.

"சோதிபெறும் சுதந்திரம்" என்ற தலைப்பில் அமைந்த கவிதை போருக்கு அறை கூவி நிற்கின்றது. "எச்சங்கள்" என்ற தலைப பில் அமைந்த கவிதை எனது வீட்டில் மிதிவெடி பகைவன் போட்ட எச்சங்கள் என்று சொல்லி, "தமிழா எழடா புலியாய்" என்ற தலைப்பில் அமைந்த கவிதை வரிகள் போருக்குத் தயார்படுத்தியும், கவிஞர் வரிகள் வீரன் போல் எழுந்து நிற்கின்றது.

"நான் உன் பின்னவன் தான்" என்ற தலைப்பில் அமைந்த கவிதை போருக்கு சென்று வெற்றியுடன் திரும்பி வந்த சகோதரிக்கு பின்னே தான் நான் என்று சொல்லி "காற்றள்ளும் ஒரு வேகம்" என்ற தலைப்பில் அமைந்த கவிதை வீரனையும், இயற்கையையும் அள்ளிச் செல்கின்றது. "காதலர் தினம்" என்ற தலைப்பில் அமைந்த கவிதை உலகநாடுகள் விழா எடுக்கும் காதலர் தினம் அன்று எங்களின் நாட்டில் போர் நடந்து காலிழந்த தினம் என்று சிறப்பாக காதலர் தினத்திற்கு மேலாக எங்களின் காலிழந்த தினத்தினை குறிப்பிட்டுள்ளார் கவிஞர்.

"என் மகள் களத்தில்" என்ற தலைப்பில் அமைந்த கவிதை தாய் தனது மகனை களத்திற்கு அனுப்பி வித்துடலானபோது தனது மகளையும் களத்திற்கு அனுப்பி வைக்கும் வீரம் இவ்வரிகளில் இளையோடி நிற்கின்றது. "புனிதப் போரில்" என்ற தலைப்பில் இடியாகி விழுந்தாலும் அதன் உள்ளே புலிவீரன் நிற்பான் என்று சொல்லும் கவிதை வரிகள் வெற்றிக்கான அறிகுறியாக திகழ்கின்றது.

"அம்மா" என்ற தலைப்பில் அமைந்த கவிதை வரிகள் அரவணைத்து அன்பு காட்டி வளர்த்திடும் பெண் கர்ணன் என்றும், "அனாதை" என்ற தலைப்பில் அமைந்த கவிதை வரிகள் பெற்றோரை இழந்து, உறவினர்களை இழந்து, நடுத் தெருவில் நின்ற பிள்ளைகளுக்கு ஆதரவு கொடுக்கும் தலைவர் இருக்கும்வரை காந்தரூபன் அறிவுச்சோலை எந்தன் கண்ணாச்சு, ஈழதேசம் எந்தன் உயிராச்சு என்று தவழும் வரிகள் உற்சாகம் ஊட்டுகிறது.

தொடர்ந்து "அன்பான வெண்ணிலவே" என்ற தலைப்பில் கவிஞனுக்குள்ளும், காதலனுக்குள்ளும் பூத்துக் கிடக்கும் வெண்ணிலவே, புலிகளோடு நீயும் ஆடுகளம் வருவாயா? என்று கேட்கும் கவிதை வரிகள் ஆழமானது.

"AK 47" என்ற தலைப்பில், எங்கள் வாழ்வில் வெளிச்சம் தந்த சூரியன் இது என்றும், "ஊர்" என்ற தலைப்பில் அந்நியன் எமது ஊரில் இருந்து வெளியேறு என்றும், "முதன் முதலாய்" என்ற தலைப்பில், மறக்கமுடியாத அந்த திருநாள் தமிழ்த் தலைவரைப் பார்த்ததென்று அன்று ஏற்பட்ட அனுபவங்களைச் சொல்லி, "ஆசை" என்ற தலைப்பில் விடுதலை வீரனுக்குள்ள ஆசைகளை தெளிவாகச் சொல்லி "புலம் பெயர்ந் தவர்கள்" என்ற தலைப்பில் அவர்கள் அங்கு படும்பாடு, உடல் அங்கு உயிர் இங்கு எனனும் வரிகள் மகிழ்ச்சியின் சோகமாகவும் ஆராதிக்கின்றது.

"பஞ்ச பூதங்கள்" என்ற தலைப்பில் மீண்டும் எம் வீரர்களின் உயிப்பெற்றுத்தா என்று கேட்டு, "எல்லைப்படைவீரன்" என்ற தலைப்பில் நாட்டுக்கும் வீட்டுக்கும் உழைப் பவன் இவனே என்று, "எனக்கின்னும் தெரியவில்லை" என்ற தலைப்பில் கவிதை நான் எழுதும்போது எங்கிருந்து வருகின்றது என்று, "பயங்கரவாதிகள்" என்ற தலைப்பில் எதிரி தமிழ் மக்களை எவ்வாறு கொலை செய்தான் என்றும் அழிவுகள் தொடர்ந்த காரணத்தால் நாங்கள் போராட ஆரம்பித்தோம் அதனால் பயங்கரவாதிகள் ஆனோம் என்று காரணம் காட்டி வரிகள் முன்னேறுகின்றது.

"தாயகத்தின் கோயில்கள்" என்ற தலைப்பில் மாவீரர் துயிலுமிடங்கள் தாயகக் கோயில்கள் என்றும் ஒவ்வொன்றிலும் அரியபேறு கிடைக்கவில்லை, திலீபனின் தியாகம் என்ற தலைப்புகளிலும் கவிதை தொடர்கின்றது.

"களத்து மேட்டுக் காதல்" என்ற தலைப பில் எல்லாச் சமரிலும் அவளும், நானும் காதலும் கனிந்தது என்றும் கதையை கவிதை வரியில் சொல்லி இருக்கின்றார் கவிஞர்.

மேலும், சமாதானங்கள், கடல், முரண்பாடுகளில் ஓர் இணக்கப்பாடு, வந்துபாருங்கள், போர்க்குறள், ஈழத்தாயே, செம்மணி, இன்று புலர்ந்தது எதற்காக? விடுதலை கல்லறைகள் பல எழலாம், ஒளிக்கடவுள்கள், இயற்கையின் பாடம், முகம், களவெண்பா, முற்றுப்பெறாத காவியம் என்ற கவிதைத் தலைப்புகளில் அமைந்த கவிதை வரிகள் போராட்ட வாழ்வில் அதற்கான விளைவுகளையும் பயன்களையும், பெறுபேற்றையும் அடையும் விடுதலை எனவும் பிரதான பாதையாக இனங்காட்டி ஒவ்வொரு கவிதை வரிகளும் நகர்ந்திருப்பது சிறப்பானது கு.வீராவின் இந்த கவிதைத் தொகுதியானது தமிழ் போராட்ட வரலாற்றின் விம்பங்களின் ஒளிக் கீற்றுகளில் கண்டெடுக்கப்பட்டது எனலாம்.

**- செல்வா -**

**சிறுகதைத் தொடர்ச்சி...**

பயமாயிருக்கிறது. எதிர்ப்படும் எவனும் பிரமராட்சதர்களின் மாயத் தோற்றங்களாக இருக்குமோ? என அச்சமாயிருக்கிறது. எனினும் சர்வவல்லவர் மீதுள்ள நம்பிக்கையைத் தளரவிடாது ஒவ்வோர் இரவும் அவரிடம் பிரமராட்சதர்களைச் சங்கரிக்க வல்ல தூதுவரை அனுப்பி வைக்குமாறு மன்றாடிக்கொண்டிருக்கிறேன். நான் மட்டுமல்ல என்போன்ற பெண்கள் எல்லோருந்தான். நத்துகள் விடாமல் அழுகின்றன. இரவில் எங்கள் மன்றாட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதோ இரவு நெருங்கி விட்டது. நான் சர்வவல்லவரை மன்றாடப் போகிறேன். என்போன்றவர்களுக்கு அநுகூலமளிக்கும் விதத்தில் ஏதேனும் நிகழ்வதற்காக நீங்களும் பிராத்தியுங்கள்.

* * *

நேற்றிரவு மன்றாடி முடித்து, சற்றே கண்ணயர்ந்தபோது என்று மில்லாதவாறு ஒருகனவு வந்தது. விலங்கு பூட்டப்பட்ட நிலையில் நானிருக்கிறேன். கூரையிலிருந்து ஒளி கசிந்து உள்ளே விழுகிறது. என்னைச் சுற்றியிருந்த விலங்கு உடைகிறது. எழுந்து நிமிர்நதபடியே வ்தியில் இறங்குகிறேன். என்போன்ற பலர் நிமிர்ந்து நடந்து கொண்டிருக்கின்றனர்.

எட! மறந்துவிட்டேன். பள்ளிக்கூடம் புறப்பட நேரமாகிவிட்டது. வீதியில் இறங்கி நடக்கிறேன். அதென்ன சந்தியில் ஆடகள் குழுமி நிற்கின்றனர். என்ன நிகழ்ந்திருக்கும்? அவர்களை நெருங்கி மெல்ல எட்டிப் பார்க்கிறேன. ஒருவன் கூரான கொம்புகளுடன் தலையறுபட்டு, வாய் பிளந்துபோய் இறந்து கிடக்கிறான். அவ்னது நெற்றியில் பாக்களவு மச்சம் இருப்பதும் தெரிகிறது. எனக்கோ துள்ளிக்குதிக்க வேண்டும்போல் இருக்கிறது 'சர்வவல்லவரே என் போன்றவர்களின் கூப்பிடுதலைச் செவிமடுத்து, எங்களை நிழல்பாடுகளிலிருந்து தப்புவிக்க உமது தூதுவர்களை அனுப்பி பிரமராட்சதர்களைச் சங்கரிக்கத் தொடங்கியதற்கு தோத்திரம்! உமது ராஜ்ஜியத்தில் எங்கள் ஆத்மா பயமின்றி நிமிர்ந்து சஞ்சரிக்கும்' சர்வவல்லவருக்கு மானசீகமாகத் துதி பாடிப் பள்ளிக்கூடம் நோக்கி நிமிர்ந்து நடக்கிறேன். இனிச் சந்திக்குச்சந்தி பிரமராட்சதர்கள் கழுத்தறுபட்டு இறந்து கிடப்பதை அடிக்கடி கேள்விப்பட்டுக் குதூகலிப்பேன். யுகம் யுகமாய் என் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைக்கெல்லாம் முடிவுகாலம் நெருங்கி வந்திருக்கிறது.

❖

# இலக்கிய வடிவங்கள் மாறுபடுவதற்கான காரணங்கள்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இலக்கியப் பொருளான - காதல், வீரம் என்ற விடையங்களைக் கூறுவதற்கு அகவல் என்ற இலக்கியப்பா வடிவம் வேண்டியதாயிற்று.

அதேபோல சங்கமருவிய காலப்பகுதி கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட மூன்று தொடக்கம் ஆறு நூற்றாண்டுவரையான காலப் பகுதியாகும். இந்தக் காலப்பகுதியின் இலக்கியங்கள் அறத்தைக் கூறுவதைப் பிரதான மான பொருளாகக் கொண்டன. எனவே அறத்தினைப் பாடுவதற்கு அகவல் யாப்பு பொருத்தமில்லாத காரணத்தால் அறத்தினை வலியுறுத்துவதற்கு வெண்பா யாப்பினைப் பயன்படுத்தினர்.

வெண்பா என்ற பாவகை செய்யுள ஓசையினை உடையது. அதாவது ஒருவருக்கு அறிவரை கூறுவதற்கானது. எதிரே ஒருவர் நிற்பதுபோலவும் அவருக்கு அறிவுரை கூறுவது போலவும் அமைந்தவகையில் ஓசையுடையது. களப்பிலர் ஆட்சியால் சீர்குலைந்திருந்த சங்கமருவியகால மக்களுக்குக் கருத்துக்கூற இந்தவகை ஓசையுடைய இலக்கியங்கள் தோன்றுவது அவசியமாயிற்று. இந்த இலக்கியங்களில் சங்கமருவிய காலத்தில் தோன்றிய திருவள்ளுவரின் திருக்குறள் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்தத் திருக்குறள் பின்னர் தோன்றிய பாவகையான அற இலக்கியங்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே வெண்பா என்ற இலக்கியவகை சங்கமருவிய காலப்பகுதிக்கு ஏற்றதாகக் காணப்பட்டது.

யாப்புக்களின் அமைதியில் பாடல்கள் பாடமுடியாத சந்தர்ப்பங்களில் அல்லது பாடல்களின் பொருளைப் புலப்படுத்த முடியாமல் போகின்ற உணர்ச்சி மிகுந்த இடங்களில் யாப்புகளின் தேவை அருகிப் போகினறது.

இந்தவகையில் சங்ககாலத்தின் இலக்கியப் பொருளுக்கு ஏற்பவும், சங்கமருவிய காலத்து கருப்பொருளுக்கு ஏற்பவும் - இலக்கிய கருப்பொருட்கள், இலக்கிய வடிவம் என்பன மாற்றம் பெறுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இலக்கியத்தின் பொருளானது ஒன்றாகவே எந்தக் காலத்திலும் இருக்கமுடியாது. இலக்கியப் பொருள் தேக்கமடைகின்றபோது இலக்கிய வடிவமும் மாற்றமடைய வேண்டியதேவை ஏற்பட்டுவிடுவது இயற்கையாகிவிட்டது.



அதாவது புதிதாகச் சொல்வதற்கு ஒரு விடயமும் இல்லாதுவிடின் ஏற்கனவே கூறப்பட்ட இலக்கிய வடிவத்தில் மாற்றம் கொணடு வரவேண்டிய தேவை உருவாக இடமுள்ளது.

இலக்கியப் பொருள் ஒன்றினை ஒரே மாதிரியாக எல்லோரும் கூறிவிட்டால் அல்லது ஒரே இலக்கிய வடிவமாக அமைந்துவிட்டால் அந்த இலக்கியத்தை வாசித்து ரசிக்க முடியாது. ஆகவேதான் இலக்கியப் பொருள் ஒரு காலத்தில் தேக்கமடைகின்றது எனில் இலக்கிய வடிவம் மாறுபட்டுப் போவதைக் காணலாம்.

போர்க்காலச் சூழலில் போர் பற்றிய விடயத்தைக் கவிதை என்னும் இலக்கிய வடிவமாகத் தந்துகொண்டு இருந்தால் அதில் ஒரு கசப்பு ஏற்பட்டுவிடுவது இயற்கையானது. ஒரு கவிஞன் அல்லது படைப்பாளி பல்வேறு செய்யுள்களை எழுதுகின்ற ஆற்றல் பெற்றிருப்பான். ஒரு நாளில் நூறு செய்யுள்களைக்கூட எழுதுகின்ற ஆற்றல் இருக்கும். ஆனால் ஒருபக்க உரை நடையினை எழுதமாட்டார் என்ற தகவல்களை இலக்கிய வரலாறுகள் எமக்குத் தருகின்றன.

இந்த நிலையில் போர் பற்றியதான பாடல்கள், நாடகங்கள், வில்லிசைகள், தெருக்கூத்துகள் என்ற வகையில் மாற்றம் பெற வேண்டியது அவசியமாகவுள்ளது.

அதுபோலவே புதிய மரபுகள் இலக்கியத்துள் உள்வருகின்ற போதும் இலக்கியத்தின் வடிவம் மாற்றம் பெறுவதைக் காணலாம்.

தமிழ் மொழியின் பண்பாடுகளை, மரப்களை, விளக்குகின்ற வகையிலும் பல வகையான இலக்கியங்கள் தமிழில் தோன்றியுள்ளன.

வேற்று மொழியாளரின் பண்பாடுகள், மரபுகள் தமிழ் இலக்கியங்களில் வந்து சேராதவரை தமிழ் இலக்கியவடிவம் செய்யுள் இலக்கிய வடிவமாகவே இருந்தது. 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதியில் ஆங்கிலேயர் தமிழ் நாட்டுக்கு வருகை தந்தபோது தமிழில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டன. அவ்வாறு ஏற்பட்ட மாற்றங்களில் முக்கியத்துவமான ஒன்றே உரை நடை இலக்கியங்களாகும். இந்த இலக்கியங்கள் தோன்றிய ஐரோப்பியர் காலத்தையும் இலக்கிய வரலாற்றினிலே காண்கிறோம். சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் பிற்காலத்தில் பெரியபுராண வசனமாக நாவலர் பெருமானின் வசனநடையில் வருவதனை உதாரணமாகக் கொள்ளலாம். தமிழ் மொழியில் செய்யுள் இலக்கிய வடிவம் 18 ஆம் நூற்றாண்டு வரை நிலவி வந்தது.

இவ்வாறான ஒருநிலை இருந்த வேளையில் ஆங்கிலேயர் வருகையும் அச்சு இயந்திர வருகையும் இலக்கிய வடிவத்தில் பெரும் மாற்றத்தினைக்கொண்டுவந்தது. செய்யுள் வடிவில் இருந்த இலக்கியங்கள் உரைநடையில் ஆக்கப்பட்டன. புதிய இலக்கியங்கள் பல உரை நடையில் எழுந்தன. இந்த நிலைக்கு வேற்று நாட்டு மரபுகள் - ஆங்கில மரபு தமிழில் கலந்தவையே காரணம்.

அதாவது ஆறுமுகநாவலரின் முற்போக்கான முயற்சியின் காரணமாக அச்சியந்திரம் வரவழைக்கப்பட்டு உரைநடை தோற்றம்பெற இலகுவான வழிவகைகள் பல எழுந்தமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே, இவ்வாறான வழிகளிலே இலக்கியத்தின் போக்கு, கருப்பொருள், இலக்கிய வடிவம் போன்ற விடயங்களில் மாற்றம் பெற்றுக்கொண்டே இற்றைவரை வருகின் றது. ஆரம்பகாலச் செய்யுள்கள் மரபுமுறையில் அமைந்து, புதுக் கவிதைகளாகி உரை நடைவடிவம் பெற்று குறுநாவல், நாவல் என இலக்கியத்தின் வடிவப்போக்கு சீரிய முறையில் மாற்றங்கண்டு கொள்வது கண்கூடு.

**பூ.நகுலன் B.A (Hons)**

# போரினால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 22 மில்லியன் நிதி

(கிளிநொச்சி)

போரினால் பாதிக்கப்பட்டு அடிப்படை வசதிகளற்ற கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 22 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

நிகொட் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கருத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் 2 ஆம் கட்ட அபிவிருத்தித் திட்டத்துக்கு எள்ளுக்காடு, கோவில்வயல், விநாயகபுரம், காந்திபுரம் ஆகிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கிராமங்களில் போரினால் பாதிக்கப்பட்டு அடிப்படை வசதிகள் குறைந்த கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில்- வீதிப் புனரமைப்பு, குடிநீர் வசதிகளை ஏற்படுத்தல், கல்வி மேம்படுத்தல், பொதுக்கட்டடத் தொகுதி, வருமான அதிகரிப்புத் திட்டம், குழுக்களுக்கான வசப்படுத்தல் பயிற்சி, சுகாதார மேம்படுத்தல் ஆகிய திட்டங்களை மேற்கொள்வதற்கு இந்த நிறுவனங்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்குப் பங்காளி நிறுவனமாக கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வுக் கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களுடன் கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் றீகன் ஆகியோரும் மற்றும் அரசதரப்புப் பிரதிநிதிகளாக நிகொட் திட்ட - பிரதித்திட்டப் பணிப்பாளர் பார்த்தீபன், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்ட - செயல்திட்ட இணைப்பாளர் ரவிகாந் ஆகியோரும் கைச்சாத்திட்டுள்ளனர்.

கடந்த வாரம் கைச்சாத்திடும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நிகொட் திட்ட - உதவித் திட்டப் பணிப்பாளர் சோ.துஷ்யந்தினி, தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறியியலாளர் செந்தூரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

## நடமாடும் சேவை

வட்டக்கச்சிப் பிரதேசத்தில், வட்டக்கச்சிப் பிரதேச காவல்துறையினரால் குற்றவியல், குடியியல் பிணக்குகள் தொடர்பான விசாரணைகள் நடமாடும் சேவைகள் மூலம் தொடர்ந்து நடத்தப்படவுள்ளது. இந்தச் சேவையில் இந்தப் பிரதேச மக்கள் கலந்துகொண்டு தமக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளமுடியம் என வட்டக்கச்சிப் பிரதேச காவல்துறைப் பொறுப்பாளர் கின்ஸ்சிலிதாஸ் தெரிவித்தார்.

குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்படுவதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கும் நடைமுறைகள் மீது தீவிர கவனம் செலுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (9)




# நீண்டகாலமாக வேயப்படாத நிலையில் மணியன் குளம் முன்பள்ளிக் கட்டடம்

அக்கராயன் - மணியன்குளம் கிராமத்திலுள்ள முன்பள்ளிக் கட்டடம் சீரின்மை காரணமாக முன்பள்ளி மாணவர்களின் கடந்தகாலச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இந்த முன்பள்ளியின் கட்டடத்துக்கான கூரை நீண்டகாலமாக வேயப்படாது இருப்பதனால், முன்பள்ளி மாணவர்கள் மழையில் நனைகின்றனர். இதனால் பெற்றோர்கள் மாணவர்களை முன்பள்ளிக்கு அனுப்பி வைப்பதில்லை. இதன் காரணமாக மாணவர்களின் கற்றல் செயல்பாடு தடைப்பட்டுள்ளது.

எனவே, இந்த முன்பள்ளிக்குப் பொறுப்பான நிறுவனம் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனப் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஸ்ரீ)

# மணியன்குளம் கிராம மக்கள் வயல் காணிகளில் வாழ்கின்றனர்

(கிளிநொச்சி)

அக்கராயன் - மணியன்குளம் கிராமத்தில் வாழும் மக்களுக்குக் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வயல்காணிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் 76 குடும்பங்கள் மேட்டுநிலமின்றி, வயற்காணிகளில் வாழ்ந்து வருகின்ற போதிலும், இவர்களுக்கான மேட்டு நிலக் காணிகளை வழங்குவதற்கு நியாப் திட்டத்தின்கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டதையடுத்து, இவர்களுக்கான காணிப் பதிவுகள் கரைச்சிப் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட காணிகளில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கமைய வீட்டுக்கான அத்திவாரம் போடப்பட்டு, அரைச்சுவர் வரையில் கட்டப்பட்டநிலையில் காணப்படுகின்றது.

# முல்லைத்தீவு - நாயாற்றுப் பாடசாலைக்கு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு - நாயாற்றுப் பாடசாலைக்கான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டமைக்கு அந்தப் பிரதேச மக்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

நெருக்கடிச் சூழ்நிலைகளுக்கும், பல கஷ்டங்களுக்கும் மத்தியில் மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு பணிபுரியும் தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தினரும், முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளரும் இணைந்து அண்மையில் நாயாற்றுப் பாடசாலைக்கான பஸ் சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

இந்தப் பேருந்து பணியை ஆரம்பித்து வைத்தமைக்காக - தமிழீழ போக்குவரத்துக் கழகத்தினருக்கும், முல்லைதீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளருக்கும் அந்தப்பிரதேச மக்கள், மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் எனப்பலரும் தமது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# வற்றாப்பளை மாணவர்களுக்கு சாரணிய சின்னம் சூட்டும் விழா

முல்லைத்தீவு - வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவர்களுக்கான சாரணியச் சின்னம் சூட்டும் விழா கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்த விழாவில் 48 சாரணிய மாணவர்களுக்கு சின்னம் சூட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் சாரணிய பொறுப்பாசிரியர் எஸ்.சிவாகுகன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை பாடசாலையின் உப அதிபர் ஆர்.றொபேட் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக்கொடியை முல்லை வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் ஜெயம் சபாபதி ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியை பாடசாலை அதிபர் எஸ்.யோகேஸ்வரன் ஏற்றி வைத்தார்.

சாரணியக்கொடியை பாடசாலையின் சாரணியப் பொறுப்பாசிரியர் எஸ்.சிவாகுகன் ஏற்றினார்.

வாழ்த்துரையை சாரணிய உதவி ஆணையாளர் ஜெயம் சபாபதி நிகழ்த்தினார். சாரணியர்களுக்கான சின்னத்தை பாடசாலைச் சாரணியப் பொறுப்பாசிரியர் எஸ்.சிவாகுகன், அதிபர் யோகேஸ்வரன் சாரணிய உதவி ஆணையாளர் ஜெயம் சபாபதி ஆகியோர் சூட்டினர்.

இந்த நிகழ்வில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## தற்காலிக அடையாள அட்டை வழங்குவது இடை நிறுத்தம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்காலிக அடையாள அட்டைகள் வழங்குவது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

விண்ணப்பிக்கின்ற சகலருக்கும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே தற்காலிக அடையாள அட்டை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான அனைத்து ஒழுங்குகளையும் பிரதேச செயலகம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கூட்டுறவு சம்பந்தமான கருத்தரங்கு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை 12 மணிக்கு கூட்டுறவு சம்பந்தமான கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு வட்டக்கச்சி மகா வித்தியாலய மாணவன் சி.தர்சன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துக்களை கூட்டுறவுச் செயலாளர் க.சிவகுமார் வழங்கினார். அவரது உரையில் பாடசாலை மாணவர்களுக்கு கூட்டுறவு சம்பந்தமான கருத்துக்களை வழங்கியதோடு, பாடசாலை சிற்றுண்டிச்சாலை, நூல்நிலையம் போன்றவை அமைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் நன்றியுரையை பாடசாலையின் உயர்தர மாணவி கு.குவேதினி நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (9)

# புனரமைப்புக்கு மண் பறிக்கப்பட்டும் செப்பனிடப்படாத நிலையில் வீதி!

மல்லாவிப் பிரதேசத்தின் சில கிராமங்களில் உலக உணவு திட்டத்தின்கீழ் வீதிப் புனரமைப்புக்கென பறிக்கப்பட்ட கிரவல் மண் பரப்பப்பட்டு, இதுவரை செப்பனிடப்படாத நிலையில் வீதியால் பயணிக்க முடியாது இருப்பதுடன், விபத்துக்களும் ஏற்படும் வாய்ப்பு ஏற்படுகின்றது என அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மல்லாவி நகரை அண்டிய எம்எஸ் வீதி, என்.சி. திரையரங்க வீதி, ஐங்கரன் வீதி, கிராமிய அபிவிருத்தி வங்கி வீதி, கிட்டம்மா குடியிருப்பு வீதி ஆகிய வீதிகளில் குவிக்கப்பட்ட கிரவல் மண் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதுடன், இந்த வீதிகள் ஒடுக்கமாக இருப்பதனால், மழை காரணமாக கிரவல் மண் கரைந்து வீதி - சேறும் சகதியுமாக காட்சியளிக்கின்றது.

எனவே, பெருமழை ஆரம்பிப்பதற்கு முன்னர் கிரவல் மண்ணைப் பரவி வீதியை செப்பனிட்டு, தமது சீரான போக்குவரத்துக்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஒருவர் காயம்

(வன்னேரி)

கடந்த வெள்ளிக்கிழமை வன்னேரி வீதியில் இரவு 7.15 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது -

மோட்டார் சைக்கி ளில் பயணம் செய்தவர் மீது வீதிக்குக் குறுக்கே திடீரென வந்த மாடு மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றதாகத் தெரியவருகிறது. (ஸ்ரீ)

# கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் பதினாறு முதியோர் கௌரவிக்கப்பட்டனர்.

முதியோர் கௌரவிப்பு நிகழ்வு கரைதுறைப்பற்று பிரதேசச் செயலர் பணிமனையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதில் 90 வயதிற்கும் மேற்பட்ட 16 முதியோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு கரைத்துறைப்பற்று உதவி அரச அதிபர் அ.சோதிநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் மங்கள விளக்கை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் து.வி. ஜெயகுலராஜா ஏற்றினார்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை- கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் இ. கிருஷ்ணபிள்ளை, பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் து.வி.ஜெயகுலராஜா, முள்ளியவளை வித்தியானந்தக் கலலூரி அதிபர் பே.கணேஸ், குமுழமுனை கிராம அலுவலர் தெய்வேந்திரம், உப்புவெளி கிராம அலுவலகர் பரஞ்சோதி, முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவன் ம.ஜெறோம், உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரி ப.ஆரணி ஆகியோர் நிகழ்த்தினர்.

ஒவ்வொரு வருடமும் இந்தக் காலப்பகுதியில் முதியோர்களை அழைத்து கௌரவிக்கப்படவேண்டுமென இந்தநிகழ்வில் முடிவெடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து முதியோருக்கான கௌரவிப்பும், பரிசுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் நன்றியுரையை உதவி அரச அதிபர், செயலக நிர்வாகப் பிரதம எழுதுவினைஞர் அன்ரன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மன்னார் - தேவன்பிட்டி மீனவர்கள் ஆற்றுப்பாலம் அமைக்க கோரிக்கை

மன்னார் தேவன்பிட்டி மீனவர்கள் பிடித்துவரும் பெரும் தொகையான கடலுணவுகளை, தமது துறைமுகங்களில் வைத்து சந்தைப் படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த துறைமுகத்திற்கு செல்லும் வீதியில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் பரந்த ஆறு காணப்படுகின்றது. இதனைத் தாண்டி கடலுணவுகளைக் கொள்வனவு செய்யவரும், வாகனங்கள் செல்வதற்கு வீதியின் அளவு போதாமையினால் இந்த மீனவர்கள் தமது கடலுணவுகளைப் பல சிரமங்களுக்கு மத்தியில் வேறு துறைமுகத்திற்குக் கொண்டு சென்று, சந்தைப்படுத்தவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதனால் இந்த கடலுணவுகளை சந்தைப்படுத்துவதற்காக ஆற்றுப்பாலம் அமைத்துத் தரும்படி சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவித்தும், இதுவரை பலன் ஏதும் கிட்டவில்லை என அந்தப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

# அடிப்படை வசதிகள் இன்றி இயங்கும் பழையவாடிஅரசினர் பாடசாலை

(வவுனியா)

வவுனியா வடக்கு பழையவாடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அடிப்படை வசதிகளின்றி மிக நீண்டகாலமாக இயங்கி வருகிறது.

இந்தப் பாடசாலையின் கூரைகள் வேயப்படாத நிலையில் காணப்படுவதனால், மழைநீரானது வகுப்பறைகளுக்குள் உட்புகுகின்றது.

இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடு முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகப் பலதடவை வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிமனைக்குத் தெரியப்படுத்தியும், பலன் எதுவும் கிடைக்கவில்லையெனப் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

# அடிப்படை வசதிகளின்றி விடத்தல்தீவு கிராம மக்கள்

விடத்தலதீவு முன்பள்ளி நிரந்தரக் கட்டடம் புனரமைக்கப்படாமையினால் தற்காலிகமாக ஆலயக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதனால் பல கஷ்டங்களை எதிர்நோக்குவதாக முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை - விடத்தல்தீவு கிராம வீதிகள் புனரமைப்பு செய்யப்படாத நிலையில் காணப்படுவதால் வீதிகள் தோறும் நீர் தேங்கி நிற்பதாகவும், இதனால் இவ்வீதிகளால் பயணிப்போருக்கு தொற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் இந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*நில்லாத வற்றை நிலையின் என்றுஉணரும்*
*புல்லறிவு ஆண்மை கடை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அரசியலமைப்பு மாற்றம் மற்றொரு ஏமாற்று முயற்சியே...

அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவருவதற்கு அல்லது திருத்தியமைப்பதற்கு பொதுமக்களின் ஆணையைக்கோர ஜனாதிபதி விரும்புவதாகவும், இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து - தனது கட்சியினதும் அரசின் கூட்டணியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களினதும், ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டுவருவதாகவும் கொழும்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இப்போதுள்ள அரசியலமைப்பின் பிரகாரம் எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையையும், அரசியல் ரீதியில் மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லையென்பதே தீர்வு முயற்சிகள் கடந்த சில வருடங்களாக தொடர்ந்தும் இழுபறிநிலையில் எந்த விதமான நம்பிக்கைதரும் முன்னேற்ற நகர்வுகளுக்கான வாய்ப்புக்கள் எதுவுமின்றி நிரந்தரத் தேக்கநிலையில் இருப்பதற்கான ஒரேகாரணமாம்.

அளப்பரிய அதிகாரங்களைக்கொண்ட, நிறைவேற்று அதிகாரபலத்தினை அரசியல் யாப்புரீதியில் சட்டபூர்வமாக தன் வசம் வைத்துள்ள ஜனாதிபதியும் நாட்டின்தேசிய முக்கியத்துவம் மிக்க பிரச்சினைகளில்கூட சுயாதீனமாக - எந்தவகையான முடிவையும் எடுக்கும் வலுவற்ற நாடாளுமன்றமும் முரண்நிலைகளில் தமது கருத்தியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கையில் சகல பிரச்சினைகளும் மேலும் அதிகளவில் சிக்கலாவதற்கான சூழலே தொடர்ந்தும் நிலவிவருகின்றதெனலாம்.

முன்னர் அரசாங்கம் ஐ.தே.முன்னணியின் வசமும், அதிகாரங்கள் யாவும் ஜனாதிபதியிடமும் இருந்தகாலத்தில் அரசின் சமாதான முயற்சிகளை ஜனாதிபதி நிராகரிப்பதும், ஜனாதிபதியின் ஆலோசனைகளையும் அரசு புறந்தள்ளுவதென்பதும் இலங்கைக்கே உரிய ஒரு கேவலமான அரசியல் பண்பாகவே நிலவிவந்தது.

இதற்கு அப்போதைய பிரதமர் ரணிலும், ஜனாதிபதி சந்திரிகாவும் பாரம்பரியரீதியில் எதிர் அரசியல் முகாம்களைச் சேர்ந்தவர்கள் என்பதே பிரதான காரணமுமாகும்.

ஆனால், இன்று ஜனாதிபதியும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் ஒரே கொள்கைகளைக் கொண்டவர்களாக இருந்தபோதும்கூட - சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான முயற்சிகளில் ஜனாதிபதிக்கும் அவரின் அரசில் கூட்டணியினராக அங்கம்வகிக்கும் பங்காளிகளுக்குமிடையே ஒரு மித்த சிந்தனையும் செயற்பாடும் இல்லையென்பது துரதிஷ்டமான நிலையேயாகும்.

அரசுக்குள் ஒருவரையொருவர் காரசாரமாக விமர்சிக்கும் தோழமைக்கட்சிகளை அரசியல் சுயலாபத்தினை அடிப்படையாகக்கொண்டு அரவணைத்துள்ள ஜனாதிபதியால் அவர்களின் சமாதான எதிர்ப்பு நிலைப்பாட்டிற்கு மாறாக எந்தவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ள முடியாதிருக்கிறது என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

ஆத்மார்த்தமாக - அடிப்படையில் அரசியல்ரீதியில், பகையுணர்வு கொண்டோர்களை அரசியல் லாபத்திற்காக பங்காளிகளாக்கிக் கொண்டதன் ஆபத்தை ஜனாதிபதி நன்றாக உணர்ந்திருந்தாலும், ஜே.வி.பியினரை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதில் ஜனாதிபதி கையாலாகாதவராகவே உள்ளார்.

பங்காளிகளைத் தேசிய நலன் கருதிக்கூட ஒட்டவும், வெட்டவும் முடியாதநிலை அவருக்கு நெருக்கடிதரும் விடயமாகி விட்டது.

இந்தநிலையில், அவர் அரசியல்அமைப்பை எவ்வாறு மக்கள் ஆணைபெற்று எந்தநோக்குடன் மாற்றியமைக்கப் போகிறார் என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

இது ஒருபுறம் இருக்க ஜனாதிபதி மக்கள் ஆணைபெற வாக்கெடுப்பு நடத்தப்போகிறார் என்றால், எந்தவகையில் அரசியல் அமைப்பினை மாற்றப்போகிறார் என்ற கேள்வியும் இயல்பாக எழவே செய்கிறது. நிச்சயமாக தனது அரசியல் எதிர்காலத்திற்குப் பாதகமாக அரசியல் அமைப்பை அவர் நாட்டு நலன்கருதியேனும் மாற்றப்போவதில்லையென்பது தெளிவு.

ஏற்கனவே நடந்த தேர்தல்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றுமாறு மக்கள் அவருக்கு வழங்கிய ஆணையை அவர் எவ்வாறு மதித்தார் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

எனவே, அரசியல் அமைப்பு மாற்றம் – அதற்கான மக்கள் ஆணையைப் பெற சர்வஜன வாக்கெடுப்பு என்பதெல்லாம் மக்களின் காதில் பூச்சுற்றும் மற்றொரு நடவடிக்கையேயாகும்.

அதுமட்டுமல்ல சமாதான முயற்சிகளை இழுத்தடித்துக் காலம் கடத்தக் கையாளும் மற்றொரு மூலோபாயமுமாகும்.

## நாடும் நடப்பும்




# குடாநாட்டுக்குத் தேவையான உப்பு கையிருப்பில் இருப்பதாக அறிவிப்பு

யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான அளவு உப்பு கையிருப்பில் இருப்பதாக, யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது. குடாநாட்டில் உப்புக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக வெளிவந்த தகவலையடுத்து, ஆனையிறவு உப்பு உற்பத்திப் பேட்டையிலிருந்து எடுத்துவரப்பட்ட உப்பு அனைத்துப் பல நோக்குக் கூட்டுறவுச் சங் கங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்களும், வர்த்தகர்களும் தமக்குத் தேவையான உப்பை, அந்தந்தப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த விற்பனை நிலையங்கள், மற்றும் சங்கக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை, குடாநாட்டுக்குத் தேவையான உப்பு - மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சுகாதாரத்துக்கு கேடாக இயங்கிவந்த தேநீர்ச்சாலைக்கு சீல்வைப்பு!

அச்சுவேலி நகர்ப் பகுதியில் சுகாதாரத்துக்குக் கேடான முறையில் இயங்கிவந்த தேநீர்ச்சாலை மல்லாகம் நீதிமன்றத்தால் சீல் வைக்கப்பட்டதுடன், மூவாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அச்சுவேலி நகரில் இயங்கிவந்த இந்தத் தேநீர்ச் சாலையை உரிய சுகாதார முறைப்படி வைத்திருக்குமாறு சுகாதாரப் பிரிவினர் பலமுறை கோரியிருந்தனர்.

எனினும், நீண்டகாலமாகியும் தேநீர்ச்சாலை உரிய முறையில் சுகாதாரம் பேணப்படாததையடுத்து மல்லாகம் நீதிமன்றத்தில் அச்சுவேலி பொதுச் சுகாதார பரிசோதகர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தேநீர்ச்சாலையின் உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தேநீர்ச்சாலையைச் சுகாதாரத்துக்குக் கேடுவிளைவிக்கும் முறையில் இயக்கிவந்த குற்றத்துக்காக மூவாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டதுடன் உரிய சுகாதார முறைப்படி தேநீர்ச்சாலையை இயக்குவதற்கு ஏற்றவகையில் தேநீர்ச்சாலை அமைக்கப்பட்ட பின்னர் மீளவும் திறப்பதற்கு அனுமதிக்கப்படும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. (80)

## குன்றும் குழியுமாகக் காணப்படும் மூளாய் மாவடிச்சந்திவீதி!

மூளாய்ச் சந்திக்கும், மாவடிச் சந்திக்கும் இடைப்பட்ட சில கிலோ மீற்றர்கள் நீளமான வீதி குன்றுங் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால், அந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். 786 ஆம் இலக்க பஸ் போக்குவரத்து இந்த வீதியூடாகவே நடைபெறுகின்றது. இதனால், குறிப்பிட்ட பஸ் பிரயாணிகளும் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். முன்னர் இந்த வீதி திருத்தப்பட்டபோதிலும் உரிய முறையல் திருத்தப்படாமையால் குறுகிய காலத்துக்குள் மீண்டும் பழுதடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (207)

## அரச ஊழியர்களுக்கு விரைவில் கணினிப்பயிற்சி

அரச திணைக்களங்களில் அதிகரித்துவரும் கணினிகளின் பாவனையைக் கருத்திற்கொண்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கணினித்துறையில் உயர்பயிற்சிகளை - வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் வழங்கவுள்ளது. ஏற்கனவே, கணினித்துறையில் அடிப்படைப் பயிற்சிநெறிகளைப்பெற்று இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப்பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு இந்த உயர்தரத்தினாலான கணினிப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், அலுவலகக் கடமைகளுக்குத் தொடர்ச்சியாகக் கணினி இயந்திரங்களைப் பயன்படுத்த உத்தியோகத்தர்களும், கணினிக் கல்வியைக் கற்க விரும்பும் உத்தியோகத்தர்களும் பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்படவுள்ளதாக முகாமைத்துவப் பயிற்சி இணைப்பாளர் என்.ஜெபராசா தெரிவித்தார். (122)

## பதவியுயர்வுப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டது

இணைந்தசேவை வகுப்பு -2 தரம் “அ” இல் கடமையாறறும் அலுவலர்களுக்கான பதவி உயர்வுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அடுத்தமாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இநதப் பதவி உயர்வு பெறுவதற்கான பரீட்சைகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படவுள்ளன.

அரசாங்க பொது எழுதுநர்சேவை, சிறாப்பர், பண்டகசாலைக் காப்பாளர், கணக்குப் பதியுநர் மற்றும் தட்டெழுத்தாளர்கள் போன்ற பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கே பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 40 வீதத்துக்கு அதிகமான புள்ளிகளைப் பெறுவதோடு குறித்த தரத்தில் 10 வருடங்கள் சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்தவர்களே பதவி உயர்வுக்குத் தகுதி உள்ளவர்களாவர். இந்தப் பதவி வகிப்போர் வகுப்பு - 2 தரம் “அ” இல் இருந்து வகுப்பு ஒன்றுக்குப் பதவி உயர்த்தப்படவுள்ளனர். (122)

## நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் வாணிவிழா

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் வாணிவிழா நாளைமுதல் மூன்று தினங்கள் மன்றத்தின் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது. தினமும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணிவரை இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் மன்றத்தின் மாணவர்கள் பங்குபற்றும் பல்வேறு இசை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. சனிக்கிழமை மாலை 4 மணிக்கு விஜய தசமிப் பூசையும், வித்தியாதாரமும் ஆரம்பமாகும்.

வாய்ப்பாட்டுப் பண்ணிசை, மிருதங்கம், நடனம், வயலின், வீணை, நாதஸ்வரம், தவில் ஆகியவற்றுக்குப் புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

## இணைந்த சேவை அலுவலர்களின் இடமாற்றப் பட்டியல் அனுப்பிவைப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அரசதிணைக்களங்களில் கடமையாற்றும் இணைந்த சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கான அடுத்த வருடத்துக்கான இடமாற்றப் பட்டியல் மாகாண பிரதம செயலாளரினால் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த இடமாற்றங்கள் யாவும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி அமுலுக்குவருகிறது.

இந்த இடமாற்றத்துக்குத் தாம் பொருத்தமற்றவர் எனக் கருதுவோர் இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது திணைக்களத் தலைவரினூடாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு மேன்முறையீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் குறித்த திகதியில் கடமையைப் பொறுப்பேற்காதவிடத்து அவர்களுக்கான வேதனம் நிறுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (122)

கே.ரீ.கணேசலிங்கம்

# அரசியல் நலன்களுடன் நகர்ந்த ரணிலின் இந்திய விஜயம்



இலங்கையின் கட்சி அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனித்துவமான வரலாறும், பங்கும் இயல்பாகவே காணப்படுகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின அரசியல் தலைவர்களை காட்டிலும் ஒருபடி முதன்மைவகிக்கும் ஐ.தே.க.அரசியல் தலைமைகள் பிராந்திய, சர்வதேச மட்டத்தில் உள்நாட்டு அரசியலைக் கையாள்வதில் வலுவானவர்களாக உள்ளனர். இதில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற இயல்பைக் கடந்து செயலாற்றுவதில் ஐ.தே.க. தலைவர்களுக்குத் தனித்துவமான பங்கு இலங்கை இனப்பிணக்கு அரசியலில் உண்டு. அந்த வகைக்குள் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் அடிப்படைகளை பரிசீலிப்போம்.

ஆட்சியிலில்லாத, எதிர்க்கட்சித் தலைவரின் இந்திய விஜயத்துக்கு ஏன் அவ்வளவு முக்கியம் என்ற கேள்வி யாருக்கும் எழலாம். காரணம், இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் எதிர்க்கட்சியின் இயல்பென்பது ஆளும்கட்சிக்கு எதிரான விடயங்களை எகிறுவது மட்டுமே எதிர்க்கட்சியின் அர்த்தமாகிவிட்டது. ஆனால், ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருக்கும் எதிர்வாதம் என்பது அப்படியானது மட்டும் எனக் கருதிவிடமுடியாது. அதற்குள் ஆழமான புரிதலும், ஆளும் கட்சிக்கான சமிக்ஞைகள் நிறைந்ததும், வலுமிக்கதுமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றது. இதனை விளங்கிக் கொள்ளமுடியாத ஒருவர் எள்ளி நகையாடலாம். அவ்வகையான கருத்தியல் பலவீனத்திலையோ, தவறான விளக்கத்தையோ நாம் மேற்கொள்ள முடியாது.

இலங்கைக்கு ஒரே அயல் நாடு இந்தியா என்பதிலும், அது இலங்கையின் அரசியலில் அதிக நிர்ணயங்களைச் செய்யக்கூடியதாகவுள்ளது என்பதிலும் அதிக நம்பிக்கை உடைய தலைவராக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார். தனது ஆட்சியை முடிவுக்குக்கொண்டு வந்ததில் இந்தியர்களுக்குத் தனியான பங்குண்டு என்பதைப் புரிந்துகொண்ட ரணில், தற்போது ஏற்பட்டிருக்கும் புதிய இலங்கை - சீன நெருக்கத்தை (கடந்தவாரம் இதே பந்தியில் பார்த்தோம்) வேறுவிதமாக இந்தியாவுக்குக் கற்பிதம் செய்வதில் இந்தச் சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்தத் தவறவில்லை. அப்படியான தந்திரத்தைப் பிரயோகித்து இந்தியாவைத் தனது வழிக்குக் கொண்டுவர அவர் பிரயத்தனம் எடுத்துள்ளார். அவர் கட்சி வேறுபாடின்றி இந்தியத் தலைவர்கள் எல்லோரையும் சந்தித்துள்ளார். ஜெயலலிதா ஜெயராமைக் கூடச் சந்திக்க முயற்சிசெய்துள்ளார்.

சீனாவுடன் சந்திரிகா அரசாங்கம் குறிப்பாக ஜனதா விமுக்திப் பெரமுன செயற்பட ஆரம்பித்துவிட்டதென்பதைச் சூசகமாகக் காட்ட முயன்ற ரணில், அதன் அபாயங்களையும், இந்தியாவுக்கு ஏற்படப்போகும் அசௌகரியங்களையும் குறிப்பிடத் தவறவில்லை. இதனைவிட ரணில் விஜயத்தின் மிக ஆழமான, நிதானமாக கருத்தில் கொள்ளப்பட்ட இரண்டு விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தார். அவற்றை விரிவாக நோக்குவோம்.

முதலாவது விடயம் சேது சமுத்திரக் கால்வாய் திட்டம். சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை அமுல்ப்படுத்தாது இந்தியாவைத் தடுக்கும் உபாயம் சரிவராதென ரணில் நன்கு விளங்கியுள்ளார். காரணம் தமிழ்நாட்டு அரசியல் தலைமைகள் சேது கால்வாய்த் திட்டத்தில் கொண்டிருக்கும் ஈடுபாடும், இந்திய அரசுக்குக் கிடைக்கப்போகும் இலாபத்தையும், அரசியல், பொருளாதார, இராணுவ நோக்கில் அதன் தாக்கத்தையும் மதிப்பீடு செய்துள்ள ரணில், அதனைத் தடுப்பதைவிட மாற்று உபாயத்தை முன்வைப்பதே சிறந்ததென கருதுகின்றார். எற்கனவே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது இந்த உபாயத்தை இந்தியத் தலைவர்களுக்கு உரைப்பதில் ரணில் பின்னிற்கவில்லை. ஆனால், அத்தகைய உபாயம் இலங்கையின் ஆளும்தரப்பால் தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை. அதாவது பாம்பன் பாலத்தை முதன்மைப்படுத்திப் பாலம் ஒன்றை அமைப்பது தொடர்பான கோரிக்கையை ரணில் முன்வைத்திருக்கின்றார். அதனையும் மிகத் தந்திரமாக ரணில் விக்கிரமசிங்க கையாண்டுள்ளார்.

அதன் பொருளாதாரக் கசிவுகளை தென்னிலங்கை அரசாங்கத்திற்கோ, தென்னிலங்கைக்கோ உரியதாக்க மாற்றலாம். அதைவிடப் பாலத்தை அமைப்பதால் வடக்கு பிரதேச துறைமுகங்களின் முக்கியத்துவத்தை இலங்கை - இந்திய பொருளாதார வர்த்தக உறவுநிலையோடு இணையவிடாது தடுப்பதோடு, முக்கியத்துவத்தைக் குறைக்கலாம். இன்னோர் விடயத்தையும் ரணில் விரும்பியிருந்தார். சேதுகால்வாயின் முழுமையான திட்டமிடலும், நன்மைகளையும் இந்தியத் துறைமுகங்களுக்கும் இந்திய மாநில, மத்திய அரசுகளுக்கு மட்டுமுரியதாக மாற்றுதல். அதாவது இதனையொரு சர்வதேசப் போக்குவரத்துக் கால்வாயாக மாறவிடாது தடுப்பது என்பதாகும். இதற்கேற்றவகையிலான அரசியல் உரையாடலை இந்தியாவுடன் வைத்துக் கொள்ளவே ரணில் விரும்பினார். இந்தியாவை எதிர்த்து எந்தப் பயனும் இலங்கைக்கு ஏற்படப்போவதில்லை என்பதை உணர்ந்துள்ள ரணில், இந்தியாவை அணைத்து இலங்கையின் நலனை அடைவதே கருத்துத்தெரிவித்த ரணில், சமாதானப் பேச்சு மேசைக்குள் புலிகளை வைத்திருப்பதுதான் அரசாங்கத்துக்கு வெற்றியாகும் என்றார். மறுவளமாகக் கூறினால் புலிகளைப் போருக்குப் போகவிடாது சமாதானம் சமாதானம் என்ற கருத்தோடு வைத்திருக்கவேண்டும் என்பதாகும். இங்குதான் ரணில் விக்கிரமசிங்கவின் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய உபாயம் நன்கு தெளிவாகத் தெரிகிறது.

பேச்சுக்கள் ஊடாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதல்ல ரணிலின் திட்டம். பேச்சு மூலம் பிரச்சினைக்கான தீர்வை இழுத்துச் செல்வது, மறுபக்கத்தில் இராணுவ ஆயுத ரீதியில் புலிகளைப் பலவீனப்படுத்திப் பேச்சு மேசையிலும் பலவீனமாக்குவது என்பதே அவரது திட்டமிடலாகும். இதனால் தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் அதன் அமைப்பின் உறுப்பினர்களையும் முரண்பாடடையச் செய்து, இறுதியில் தோல்விக்கு இட்டுச்செல்வதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகும்.



சேது கால்வாய் திட்டத்தை ஐ.தே.க. முழுமையாக ஆதரிக்கும் அதேநேரம், பாம்பன் அணையைப் பாலமாக மாற்றும் திட்டத்தையும் ஐ.தே.க. விரும்புகின்றது என்ற பாணியில் இந்திய அரசுக்கு எடுத்துரைத்துள்ளார். இவ்வாறு ரணில் முன்வைக்கும் பாம்பன் பாலத்தினால் என்ன இலாபம் கிடைக்கப்போகிறதென்பதையும் இங்கு அலசுவது பொருத்தமானதாக அமையும்.

இப்பாலம் தலைமன்னாருடன் இணைக்கவே பாம்பன் அணை உதவும் என்பது ரணிலின் உபாயம் என்பதால் இதன் நேரடி விளைவுகள் மன்னார் பிரதேசத்தை அதிகம் பாதிக்கும். உடனடியாகப் பாதிப்பை தமிழ், இஸ்லாமிய மக்கள் வாழும் பிரதேசத்தை தாக்கும் என்பதால், அதனால் ஏற்படப்போகும் அரசியல், பொருளாதார, கலாசார, இராணுவப் பாதிப்புகள் நேரடியாக தமிழ் முஸ்லிம்களையே சென்றடையும், இதன் இதரவிளைவுகளைக் குறிப்பாகப் பொருளாதாரத்தை மன்னாரிலிருந்து அநுராதபுரம்வரை கொண்டு செல்வதற்கு ஏற்கனவே வீதி திட்டமிடப்பட்டு அதற்கான பூர்வாங்கல் வேலைகள் அமுலாகிவருகிறது.

இது சேதுகால்வாயால் ஏற்படப் போகும் நன்மைகளையும் அடையும் நோக்கத்துடனேயே உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு காங்கேசன்துறைப் பகுதியிலும் எண்ணெய் நிரப்பு நிலையங்களுக்கான கூறுவிலைகள் கோரப்பட்டு அதன் ஒப்பந்தக்காரர்கள் வருகைதந்து முதற்கட்ட ஆய்வுகளை முடித்துள்ளனர்.

எனவே, பாலத்தைப் போடுவதனால் தமிழ் பிரதேசத்தின் முக்கியத்துவத்தை அரசியலாக்குவதுடன், சிறப்பென்ற தந்திரத்தைப் பிரயோகித்து வருகின்றார்.

இரண்டாவது - இலங்கை இனப் பிரச்சினைக்கான சமாதான அணுகுமுறையும, அதன் பிந்திய அபிவிருத்தியும் ஏற்படுத்திவரும் ஆபத்துக்களைத் தடுப்பதென்பதாகும். இந்தியத் தலைவர் எல்லோரையும் சந்தித்த போதும் ரணில் சமாதானத்தையே திரும்பத்திரும்ப வலியுறுத்தியதுடன், நரசிம்மராவ், வாஜ்பாய் என்ற ஐ.தே.கவின் பழைய நண்பர்களுடனும் இதேவிடயத்தையே முதன்மைப் படுத்தி உரையாடியுள்ளார். இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு கட்டுநாயக்க விமானநிலையத்தில்

இதில் ரணில் இன்னோர் அரசியலையும் ஆளும் தரப்புக்குத் தெரிவித்திருக்கிறார். நோர்வே பிரகடனத்தின் கீழ் விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டும் என்ற நிலைப்பாடாகும். ஏனெனில் விடுதலைப்புலிகளின் ஐரோப்பா நோக்கிய தற்போதைய நகர்வு தனியரசின் அங்கீகாரத்துக்கான முயற்சி என்பதை ரணில் கோடிட்டுக்காட்டியுள்ளார். புலிகளுடன் பேசத்தவறினால் புலிகள் தனித்துவமாகச் செயற்படத் தொடங்குகின்ற வலுவை உருவாக்கி விடுவார்கள் என்பதையே ரணில் ஆளும் தரப்புக்கு வெளிப்படுத்தியுள்ளார். அதில் ரணிலும் அவரது ஐக்கிய தேசியக் கட்சியும் மிகத் தெளிவான முடிவுடன் இருப்பதாக இந்தியத் தரப்புக்கும் அவர் உணர்த்தத் தவறவில்லை.

இந்த விஜயம் இந்தியாவை ஐக்கிய தேசியக் கட்சிப்பக்கமும் ரணிலின் தலைமை நோக்கியும் நகரத்தூண்டும் செயற்பாடாகும். ஏனெனில், ரணிலுக்குத் தனது கட்சிக்குள்ளும், தலைமைப்பதவிக்கும் எழுந்திருக்கும் புதிய சவாலை முறியடிப்பதில் பிரதான நோக்கங்களில்



ஒன்றாக இருந்தது. எப்போதும் ஒரு தலைமை தனது நலன் பின்னர், தனது கட்சி நலன், பின்னால் தனது வர்க்க நலன் என்ற ஒழுங் கையே ஒவ்வொரு பிரச்சினையையும் கையாளும் என்ற வகையில் ரணில் ஏற்கனவே கரு ஜெயசூரியாவை ஓரங்கட்டினாலும், கட்சிக்குள புதிதாக எழுச்சி கண்டுவரும் இன்னோர் தலைமைத்துவப் பண்புடைய வரும், பாதி அமெரிக்கருமாகிய மிலிந்த மொறகொட ரணிலுக்குப் பெரும் சவாலக உள்ளார். அமெரிககர்கள் விருப்பம் அடுத்த இலங்கை ஜனாதிப[தி] மிலிந்த மொறகொட என்பதில் அதிக சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. அதனை முறியடிக்கவும் கட்சியின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவுமே ரணில் இந்திய விஜயத்தை மேற்கொண்டார்.

கட்சியின் ஐம்பதாவது மாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்படும் என்பதே இந்த விஜயத்தின் அவரது முக்கியத்துவமாகும். எதுவாயினும் ரணில் இந்தியாவைத் தனது பக்கம் இழுப்பதில் இரண்டு தெளிவான அணுகுமுறையைக் காட்டியுள்ளார்.

ஒன்று - சேது கால்வாய்த் திட்டத்தில் தனது நிலைப்பாட்டைக் காட்டியிருப்பதுடன், வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் நகர்வின் பலவீனங்களையும் இந்தியாவுக்குக் காட்டிக்கொடுத்துவிட்டார்.

அதேபோன்று பேச்சுவார்த்தையில் தான் போட்ட திட்டமிடல் எது என்பதையும், அதைச் சந்திரிகா அரசு முறிப்பதால் ஏற்படப்போகும் பாதிப்பையும கோடிட்டுக்காட்டியதால் தனது பலத்தை மீளவும் இந்தியாவுக்கு நிறுவ முயல்கின்றதைக் காணலாம்.

இனப்பிரச்சினையில் சந்திரிகாவை விட தனது உபாயம் சிறப்பானதும் இந்தியாவுக்குச் சார்பானது என்பதையும் காட்டி, இந்தியாவின் நெருக்கத்தை ரணில் தேட முயன்றுள்ளார். சந்திரிகா குமாரதுங்கவை விட ரணில்தான் இந்திய விசுவாசி என்பதைக் காட்டுவதில் கணிசமான முயற்சி எடுத்துள்ளார்.

எனவே அடுத்து வரும் காலங்களில் இலங்கையின் அரசியலில் சில மாற்றங்கள் ஏற்படும் போலவே தெரிகிறது. அதன் நோக்கிலேயே ரணில் விக்கிரமசிங்கவும் நகர்ந்துள்ளார்.

## மருதுங்கேணி சந்தையில் தற்காலிக கொட்டகை!

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள ஒரேயொரு சந்தையான மருதங்கேணி சந்தையில் தற்காலிக கிடுகுக் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

2000 மார்ச் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சந்தைக் கட்டடங்களும், கடைத் தொகுதிகளும் முற்றாக அழிக்கப்பட்டன. பருத்தித்துறைப் பிரதேச சபையினால் சந்தைக் கட்டடங்கள் மீளப் புனரமைக்கப்படாமையால் மரநிழல்களிலும், வெட்டவெளியில் வைத்தே வியாபாரிகள் வியாபாரம் செய்து வந்தனர்.

மழைகாலம் அண்மித்துள்ளமையால் வியாபாரிகள், பொதுமக்கள் நன்மை கருதி பருத்தித்துறை பிரதேச சபை செம்பியன்பற்று உப அலுவலகம் சந்தைவளவின் மையப்பகுதியில் தற்காலிக கிடுகுக் கொட்டகையொன்றை அமைத்துள்ளது. (21)

### நவராத்திரி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடாத்தும் நவராத்திரி விழா இன்று மாலை 7 மணிக்கு உரும்பிராய் காளிகோயிலில் நடைபெறவுள்ளது. இதில் நவராத்திரியின் மகிமை எனும் பொருளில் ஜெஞ்சொற் செல்வன் இரா. கேதீஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும், உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய அதிபர் கே. ஆனந்தராஜனின் இசைநிகழ்வும் இடம்பெறும்.

## பருத்தித்துறை கற்கோவளத்துக்கு புதிய வீதி

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை கற்கோவள கிராமத்தையும் நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையால் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் வசிக்கும் புனிதநகர் பகுதியையும் இணை[க்]கும் புதிய வீதி பருத்தித்துறை பிரதேச சபையால் புனரமைக்கப்படவுள்ளது.

அரசாங்க அதிபரின் நிதியொதுக்கீட்டிலிருந்தே இவ்வீதி அமைக்கப்படவுள்ளது. கற்கோவளம் புனித நகரில அடிப்படை வசதிகள், போக்குவரத்து வசதிகள் அற்ற நிலையில் வாழும் மீளக்குடியமர்ந்த மக்களின் பயனபாட்டுக்கு அவசியமான வீதி ஒன்று தேவை என பருத்தித்துறை பிரதேச செயலகம் சுட்டிக்காட்டியதையடுத்தே இந்தப் புதிய வீதி அமைக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

# காஸாவின் ரபா அகதி முகாமிற்குள் இஸ்ரேலியப் படையினர் பிரவேசம்



இஸ்ரேல் படையினர் மீளவும் தென்பகுதி காஸாப் பிரதேசத்திலுள்ள ரபா அகதி முகாம் பகுதிக்குள் பிரவேசித்துள்ளனர். இந்தப் பகுதியால் ஆயுதங்கள் கடத்தப்படுவதனாலேயே படையினர் இந்தப் பகுதிக்குள் பிரவேசித்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

சுமார் பத்து தாங்கிகள், மூன்று புல்டோசர்கள் என்பனவும் இந்தப் பகுதிக்குள் பிரவேசித்துள்ளன. இவ்வாறு சென்ற படையினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டபோதும் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் காஸாவின் வடபகுதியிலுள்ள ஜபாலியா அகதி முகாம் பகுதியிலிருந்து இஸ்ரேல் படையினர் வாபஸ் பெற்றபின்னர், மீளவும் புதிய நடவடிக்கையாக இஸ்ரேல் படையினர் ரபா அகதி முகாமிற்குள் பிரவேசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 16 நாட்களாக காஸாப் பகுதியில் இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட படைநடவடிக்கையில் 130 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் மூன்றிலொரு பகுதியினர் பொதுமக்களெனவும், அதிலும் பத்து சிறுவர்கள் 14 வயதுக்குட்பட்டவர்களெனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படை நடவடிக்கையில் 500 பொதுமக்கள் காயமடைந்ததாக பலஸ்தீனப்பிரதமர் அகமட் கூரே தெரிவித்தார். இந்த நடவடிக்கையில் இரண்டு இஸ்ரேல் படையினரும் மற்றும் ஒரு பெண்ணும் கொல்லப்பட்டனர்.

அத்துடன் இஸ்ரேலிய படையினரின் தாங்கிகள் மற்றும் புல்டோசர்களின் தாக்குதலினால் 98 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டதாக பலஸ்தீன நிர்வாகம் தெரிவித்தது.

## உலக நோக்கு

### ஈராக் தலைநகர் பாக்தாத்தில்

# இரு அமெரிக்க இராணுவ ஹெலிகள் விழுந்து நொறுங்கியதில் 2 பேர் பலி

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் தென்பகுதியில் அமெரிக்க இராணுவத்தின் ஒ.எச் 58 என்ற இரண்டு ஹெலி கொப்ரர்கள் நேற்று முன்தினம் விழுந்து நொழுங்கியதில் இரண்டு படையினர் கொல்லப்பட்டதாக அமெரிக்க முதலாவது குதிரைப் படையணி தெரிவித்தது.

இது தொடர்பாக ஏற்பட்ட மேலதிக விபரங்கள் எதுவும் தெரியாதெனவும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விசாரணையாளர்கள் சென்றுள்ளதாகவும் அவர்கள் விபத்து நடைபெற்ற காரணத்தை அறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அமெரிக்க இராணுவப் பேச்சாளர் லெப்.கேணல் ஜேம்ஸ் ஹட்டன் தெரிவித்தார்.

கடந்த வருடம் மே மாதத்திலிருந்து இதுவரை ஈராக்கில் 27 ஹெலி கொப்ரர்களை அமெரிக்க இராணுவம் இழந்துள்ளது.

இதேவேளை ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கப் படையினருக்கும், கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் மீளவும் கடும் மோதல் மூண்டுள்ளது. பலூஜாவிலிருந்து பாக்தாத்திற்கு செல்லும் பிரதான வீதிப் பகுதியிலேயே கடும் சண்டை இடம்பெற்று வருவதாகவும் இதனால் அந்தப் பிரதான வீதி முற்றிலுமாக மூடப்பட்டுள்ளதாகவும் நகர வாசிகள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் கடும் ஆட்டிலறித் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகவும், இதனால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடும் மோதல் இடம்பெற்று வரும்



அஸ்காரி மற்றும் சுகாடா பகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். இந்த மோதல் சம்பவங்களில் மூன்று பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கிளர்ச்சிவாதிகளின் கோட்டை எனக் கருதப்படும் பலூஜா நகர் மீதான சுற்றிவளைப்பை தாம் மேலும் இறுக்கியுள்ளதாகவும், இதன் மூலம் அவர்கள் இப்பகுதிகளிலிருந்து தப்பிச் செல்ல முடியாத நிலைக்குள் சிக்கியுள்ளதாகவும், அத்துடன் இப்பகுதி மீதான தொடர் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுவரும் அதேவேளை எந்தவொரு புதிய இராணுவ நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவில்லையெனவும் அமெரிக்க கடற்படை தெரிவித்தது.

இதேவேளை பலூஜா நகர்மீதான அமெரிக்க விமானப் படையினர் தமது தாக்குதலை நிறுத்தினால் தாம் பேச்சுவார்த்தை மேசைக்கு செல்லத் தயாரென கிளர்ச்சிவாதிகளின் பேச்சாளர் அப்துல் ஹமீட் ஜாதோ தெரிவித்தார்.

பிரதமர் அலாவி பலூஜா நகரில் இடம்பெற்றுவரும் மோதல்களுக்கு பொறுப்பேற்க வேண்டும். அமெரிக்கப் படையினருடன் அவரது அரசாங்கம் இணைந்து அப்பாவிப் பொதுமக்கள் மீது குண்டுவீசித் தாக்குகிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமெரிக்கப் படையினரின் விமானத் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், நேற்று முன்தினம் அமெரிக்கப் படையினர் வீடொன்றின் மீது நடத்திய ஆட்லறித் தாக்குதலில் மூன்று வயதுச் சிறுமி கொல்லப்பட்டதுடன் அதே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயமடைந்ததாகவும் பலூஜா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

# தேவாலயங்களை இலக்குவைத்து பாக்தாத்தில் குண்டுத் தாக்குதல்

ஈராக் தலைநகர் பாக்தாத் நகரில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 5 கிறிஸ்தவ ஆலயங்கள் இருக்கும் இடத்தில் குண்டுகள் வெடித்தன. சுமார் ஒரு மணி நேர இடைவெளியில இந்த 5 வெடி குண்டுகள் வெடித்தன.

இந்தக் குண்டுவெடிப்பில் ஆலயங்களின் கட்டடங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. அத்துடன் தேவாலயங்களுக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த ஏராளமான கார்களும் சேதம் அடைந்தன. ஆனால் உயிர்ச்சேதம் எதுவுமில்லை.

கடந்த ஓகஸ்ட் மாதம் இது போல நடந்த குண்டு வெடிப்பில் 10 பேர் பலியானார்கள். 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். ஈராககில் ஏறத்தாழ 7 லட்சம் கிறிஸ்தவர்கள் வசிக்கிறார்கள். மொத்த சனத்தொகையில் இது 3 சதவீதமாகும்.

### சூடானுக்கு நேற்று செல்லவிருந்த

# றுவாண்டா அமைதிப் படையினரின் விஜயம் பிற்போடப்பட்டது

சூடானின் டாபூர் பிரதேசத்திற்கு நேற்று செல்லவிருந்த றுவாண்டாவின் 300 அமைதிப் படையினர் ஒரு வாரத்தின் பின்னரே செல்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டாபூர் பிரதேசத்திற்குச் செல்லும் இந்த அமைதிப் படையினருக்கான இருப்பிட வசதிகள் எதுவும் இதுவரை செய்யப்படாத காரணத்தாலேயே, இவர்களின் பயணம் தடைப்பட்டுள்ளதாக றுவாண்டாவின் வெளியுறவு அமைச்சர் முலிகண்டே ஏ.பி செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

ஆனாலும், படையினர் தங்குவதற்கான கூடாரங்கள் அமைக்கும் பணி, இந்தவாரம் ஆரம்பிக்கப்படுமெனவும், அடுத்தவாரம் படையினர் டாபூர் பிரதேசத்திற்குச் செல்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. படையினர் டாபூர் பிரதேசத்திற்குச் செல்வதற்கு தயாராகவே உள்ளனர். நாமும் அவர்களை அனுப்புவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். பெருமளவு துருப்பினர் தேவையென ஆபிரிக்கன் யூனியனும் அறிவித்துள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

நவம்பர் மாதம் முடிவடைவதற்கிடையில் 4500 படையினரை டாபூர் பிரதேசத்தில் நிறுத்த வேண்டுமென ஆபிரிக்கன் யூனியன் எண்ணியுள்ளது. தற்போது அந்தப் பகுதியில் நைஜீரிய மற்றும் றுவண்டா நாடுகளைச் சேர்ந்த ஆயுதங்களற்ற 300 சமாதானப் படையினர் உள்ளனர்.

இதேவேளை, லிபிய தலைவர் கேணல் கடாபி - சூடான் நெருக்கடிக்குத் தீர்வு காணும்வகையில் சூடான, நைஜீரியா, எகிப்து மற்றும் சாட் நாட்டுத் தலைவர்களை திரிபோலியில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த நேற்று அழைப்புவிடுத்துள்ளார்.

லிபியத் தலைவரின் இந்த நடவடிக்கை மூலம் அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடுகளை மென்மையான நிலைக்கு கொண்டுசெல்ல முடியுமென எகிப்திய வெளியுறவு அமைச்சர் அப்துல் கீற், லிபிய தலைநகரில் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சூடான் கிளர்ச்சிவாதிகள் கலந்து கொள்ளவில்லை. ஆனால் லிபியா இவர்களுடன் பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளது.

லிபியாவின் இந்த முயற்சி சூடான் நெருக்கடிக்கு இன்றியமையாத ஒன்றெனத் தாம் கருதுவதாக கிளர்ச்சிவாதிகளின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் சூடானில் வன்செயல்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை எழுபதாயிரம் மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. தெரிவித்த கருத்தை சூடான் அரசாங்கம் விசாரணை செய்து வருகின்றது.

அத்துடன், அகதி முகாமிலிருந்து மாதாந்தம் பத்தாயிரம் பேர் உயிரிழந்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபானம் தெரிவித்துள்ளது.

ஆனால், உலக சுகாதார ஸ்தாபனத்தின் இந்தத் தகவலில் எவ்வித உண்மையுமில்லையென சூடான் வெளியுறவு அமைச்சர் முஸ்தபா ஒஸ்மான் இஸ்மயில் தெரிவித்தார்.

இந்தத் தகவலை உறுதிப்படுத்துவதற்காக நாம் சூடானிலுள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர்கள் இது தொடர்பாக எந்தவித தகவலையும் வெளியிடவில்லை எனத் தெரிவித்தனர். எனவே இவ்வாறான தகவலை அவர்கள் வெளியிட்டிருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.



சீனாவில் நேற்று முன்தினம் நடந்த சர்வதேச அழகிப் போட்டியில் கொலம்பியா அழகி ஜெமிபயோலா முதலிடத்தை பெற்றார். கிரேக்க நாட்டு அழகி ஓல்கா கிப்ரியோட்டோ (வலது) இரண்டாம் இடத்தையும் அமெரிக்க அழகி அமிஹால்புருக் (இடது) மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.


நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான



ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த

போஸ் (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00,10.00 (பு.நே)

நிறஞ்சனாஸ் சங்கானை



அரசாட்சி

அர்ஜுன், லாராதத்தா மற்றும் விவேக், ரகுவரன் நடித்த

(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான

ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

7/G ரெய்ன்போ காலனி

பு.நே 10.30, 2.30, 9.30மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-2725)

மலிவு மலிவு கொள்ளை மலிவு

வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

(16-10-04) தொடக்கம் 11-11-2004 வரை சகல விதமான உடுபுடவைகள் மற்றும் ரெடிமேட் உடுப்புக்களையும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

லைடன் புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்.

222-2381 (C/3264)


## 31ஆம் நாளில் அஞ்சலிக்கின்றோம்



வடபகுதிக் கிராமிய வங்கிச் சமாசங்களின் தலைவர் திரு.சி. குமாரவேல் அவர்களின் பாரியாரும், சுன்னாகம் ப.நோ.கூ. சங்கப் பொதுமுகாமையாளரும், கூட்டுறவுத்துறையின் நிர்வாகத்தில் பெண்ணினத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கித் தனித்துவமான சேவை செய்த பெண்கள் திலகம்,

### திருமதி திலகவதி குமாரவேல் அவர்கள்

அமரத்துவம் அடைந்த 31ம் நாளில் எமது அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
கட்டைவேலி – நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்.

(C/3276)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உறவினர்கள் ஐவரைக் கொன்றுவிட்டு பொலிஸ் கொன்ஸ்டபிள் தற்கொலை!

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு தலுபொத்த என்ற இடத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் - மனைவி, மாமியார் உட்பட ஐவரை சுட்டுக்கொன்ற பின்னர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட அனைவரும் அவரது உறவினர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.மற்றுமொருவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் எம்.திலகரத்ன என்ற இந்த கொன்ஸ்டபிள் சில மாதங்களுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டவர் எனத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் கடமையிலிருந்த இவர் அதிகாரிகளுக்கு தெரியாமல் ரி. 56 ரகத் துப்பாக்கியுடன் வீட்டுக்குச் சென்று இந்தக் கொலைகளைச் செய்துவிட்டு வீட்டுக்கு வெளியேவந்து வீதியில் வைத்து தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



திருகோணமலைக்குச் சென்றுள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முஸ்லிம்களை சந்தித்த போது.

# நெல்லியடியில் சிறப்புற நடைபெற்ற 'அலைபாடும் பரணி' அறிமுகவிழா!

நிதர்சனம் நிறுவனத்தின் தர்மேந்திரா கலையகத்தின் உருவாக்கத்தில் இசைப்பிரியனின் இசையில் உருவான 'அலைபாடும் பரணி' இசைத்தட்டு அறிமுக விழா நேற்றுப் பிற்பகல் 4.00 மணியளவில் நெல்லியடி நெல்லை முருகன் மண்டபத்தில் யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் அருணன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா, மேஜர் பகலவனின் தந்தை நாகராஜா, மாவீரர் ரோமின் தந்தை கணபதிப்பிள்ளை, லெப். கடவுளின் சகோதரி சசிகலா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

யாழ்.மாவட்ட அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையை கரவெட்டி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தர்மலிங்கம் நிகழ்த்தினார். தொடர்ந்து இசைத்தட்டு முதற்பிரதியை செம்மணன் வெளியிட்டு வைக்க மாவீரர் ரோமின் தந்தை கணபதிப்பிள்ளை பெற்றுக் கொண்டார்.

இசைத்தட்டு வெளியீட்டுரையை யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையை ஆசிரியர் சன்முகலிங்கம் நிகழ்த்தினார்.

சிறப்புப் பிரதிகளை இசையமைப்பாளர் இசைப்பிரியன், கலைவிழி ஆகியோர் வழங்கினர். நிகழ்வின் இறுதியாக வடமராட்சி கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் நன்றியுரை நிகழ்த்தினார். (12,14)

# புலிகளின் இடைக்கால யோசனை பகிரங்கமாக விமர்சிக்க மாட்டேன்

## திலக் கருணாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள தன்னாட்சி இடைக்கால நிர்வாக யோசனை குறித்து கட்சிக்குள்தான் கருத்துக்களைத் தெரிவிப்பேனே தவிர பகிரங்கமாக அதனை விமர்சிக்கப்போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்துள்ள சிஹல உறுமயவின் தலைவரான திலக் கருணாரட்ண தெரிவித்தார்.

சிஹல உறுமயக் கட்சியின் ஸ்தாபகரான இவர் அந்தக் கட்சியைக் கைவிட்டு மீண்டும் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டார்.

பண்டாரகம தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திலக் கருணாரட்ண நேற்று அந்தக் கட்சியின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தின் பின்பு ஊடகவியலாளர்களுடன் உரையாடிய போதே திலக் கருணாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜே.பி.வியை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலும் பார்க்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெளிவான அரசியல் நோக்கு இருப்பதால்தான், அரசியல் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அந்தக் கட்சியில் இணைந்து செயற்படத் தீர்மானித்தேன்.

ஐக்கிய தேசியக் கட்சி எந்த யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என்றே கூறுகின்றதே தவிர புலிகளின் யோசனையையும் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. இது தொடர்பாக எனது கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை.

இது பற்றிக் கட்சிக்குள் கருத்துக்களை முன்வைப்பேனே தவிர பகிரங்கமாக விமர்சிக்கமாட்டேன்.

ஒஸ்லோ பிரகடனத்தையும், விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக யோசனையையும் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்காக ஒன்றோடொன்று தொடர்புபடுத்த முடியாதென்றும் அவர் அவர் மேலும் கூறினார்.

## கையைச் சுட்டு....

கிறது. இலங்கையின் சமாதான முயற்சி ஆரம்பித்து வெற்றிகரமாக முன்னகர்த்தியதற்கான சிறப்புரணில் விக்கிரமசிங்கவுக்கே சேர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்தியா, இலங்கையின் இனப் பிரச்சினையில் நேரடியாகத் தொடர்பு கொள்வதை விரும்பாத நிலையில் இருப்பதை இந்த இணையத்தளச் செய்தியிலும் குஜ்ரால் குறிப்பிட்டுள்ளார்.

## போர்நிறுத்தம்..

ஏற்படுத்தப்பட்டது.

யுத்தம் தொடர்ந்து கொண்டிருந்தால் நாட்டின் நிலைமை மோசமடைந்திருக்கும்.

சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிக்க மக்களின் ஆதரவைப்பெற்றோம். இலங்கையின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்படவேண்டும். குறிப்பாக தெற்கில் மாத்திரமல்ல வடக்கு - கிழக்கிலும் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். மனிதஉரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்.

பிரச்சினைகளைத் தீர்க்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வட்டமடு காணிப் பிரச்சினை முஸ்லிம்களுடன் இன்று பேச்சு!

அம்பாறை - வட்டமடுப் பகுதியில் உள்ள வயற்காணிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை பத்து மணிக்கு அக்கரைப்பற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஹேரத் அபயவீர தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாண காணி ஆணையாளர், விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையிலான குழுவினர் மற்றும் முஸ்லிம்கள் தரப்பில் அம்பாறை மாவட்டப் பள்ளிவாசல்களின் சம்மேளனச் செயலாளர் ஐ.எம்.இப்ராஹிம், காதர் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த வட்டமடுப் பிரதேசத்திலுள்ள 4 ஆயிரம் ஏக்கர் வயற்காணிகள் தம்முடையவை எனவும் எனவே இவற்றில் விவசாயம் செய்ய தம்மை அனுமதிக்க வேண்டுமெனவும் முஸ்லிம்கள் கோரிவருகின்றனர்.

ஆனால், இது மேய்ச்சல் காணியெனவும் தனிப்பட்ட ஒருவருக்கும் உரியதல்ல எனவும் தமிழ் மக்கள் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் இந்த முரண்பாட்டைத் தீர்க்கும் வகையிலேயே இன்றைய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (07)

## கனடிய...

காது விட்டால் இந்த விஜயத்தில் எந்தவித அர்த்தமும் இல்லை. இரு தரப்பினரையும் சந்திப்பதில் எந்த விதத் தடையும் இருக்கும் என நம்பவில்லை எனவும் மரியா மின்னா குறிப்பிட்டார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த மரியா மின்னா, இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கனடா எப்போதும் உரிய உதவிகளை வழங்கும் எனவும் உறுதியளித்தார்.

## அடுத்த மாதம்...

தாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அரச சார்பு ஏரிக்கரை ஆங்கில வார இதழான 'சண்டே ஒப்சேவர்' இது குறித்த மேலும் சில தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி - அரசுத் தரப்பில் இருந்து நோர்வேத் தரப்புக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து - சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான இறுதி முடிவுகளை மேற்கொள்வதற்கு நோர்வேயின் உயர் மட்டத் தூதுக்குழு அடுத்த சில தினங்களில் கொழும்பு வரவுள்ளது.

வடக்கு - கிழக்குக்கான இடைக் காலத்தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் எனப் புலிகள் தரப்பு வலியுறுத்தி வருவதால் - அதன்படியே பேச்சுக்களை நடத்துவதென அரசு முடிவெடுத்திருப்பதாகவும் -

இந்தப் பேச்சுக்களின்போது அரசாங்கம் தனது தரப்பு யோசனைகளையும் முன்வைக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## ஜப்பானியத் தூதுவர்...

ஆகியோரைக் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்துவார். பின்னர் - அகாஷி கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவிருப்பதாகவும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் செய்திகள் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டுவரும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடனும் அகாஷி பேச்சு நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் வழியில் அகாஷி புதுடெல்கி சென்று இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்தியத் தலைவர்ளுடன் பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## உறக்கத்திலிருந்த...

வழியாக இனந்தெரியாத நபர்களால் இந்த கிரனேட் வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையலில் அனுமதிக்கப்பட்ட இவர், சில நிமிடங்களில் அங்கு மரணமானார்.

புதுநகர்ப் பிரதேசம் பாதுகாப்பு வலயமாகக் கருதப்படுகிறது. தேசிய துணைப்படை (ராசீக் குழு), ஈ.பி.டி.பி, புளொட் போன்ற அமைப்புக்களின் உறுப்பினர்கள் பலரும் குடும்பங்களுடன் இந்தப் பகுதியிலேயே வசித்து வருகின்றனர்.

அத்துடன், விமானப்படைத் தளத்தை அண்மித்த பிரதேசம் என்பதால் சுற்றிவர பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட இடமாகும்.

கொல்லப்பட்டவரின் சகோதரர் குமாரசூரியம் அழகேந்திரன் என்பவர் ராசிக் குழு எனப்படும் இராணுவத்தின் தேசிய துணைப்படைச் சிப்பாயாக இருக்கின்றார் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆக்கபூர்வமான முயற்சி...

அரசாங்கம் தயாரித்துள்ள புதிய இடைக்கால நிர்வாக பிரேரணைகள் தொடர்பாக எமக்கு அதிர்ச்சியையும் குழப்பங்களையும் ஏற்படுத்துகின்றது. இதனை நிச்சயமாக விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை.

எம்மைப் பொறுத்தவரையில் நாங்கள் தெளிவான உறுதியான நிலைப்பாட்டை ஏற்கவே முன்வைத்திருக்கின்றோம். எமது தலைமைப்பீடம் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இதனை முன்வைத்திருக்கிறது.

எங்களைப் பொறுத்தவரையில் மக்களின் ஆணையாக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற ஆலோசனை வரைபை முன்வைத்திருக்கின்றோம். இந்த வரைபை சர்வதேச சட்ட வல்லுனர்கள், எமது சட்டநிபுணர்க்ள் அனைவரும் இணைந்து தயாரித்து தலைமைப் பீடத்தின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு எமது மக்களின் ஆணைக்கும் வைக்கப்பட்டு அவர்களின் ஆணையைப் பெற்ற வரைபாக இது உள்ளது.

எனவே இந்த அடிப்படையில் தான் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகுமென தேசியத்தலைவர் நோர்வே வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த போது தெளிவாக முன்வைத்த நிலைப்பாடு. எனவே, இந்த நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகள் உறுதியாகவே இருக்கின்றார்கள்.

ஆகவே, அரசாங்கத்திலிருந்து வருகின்ற இந்தச் செய்திகள் எமக்கு அதிர்ச்சியையும் குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தங்களால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபையின் அடிப்படையில் பேச்சுக்களை முன்னெடுக்க மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றார்கள்.

ஆனால், அரசாங்கம் நேரத்துக்கு நேரம் சூழ்நிலைக்கேற்ப ஜனாதிபதியும், அரசாங்கமும், அமைச்சர்களும் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லிவருகிறார்களே தவிர சொல்லுக்கும் செயலுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாத நிலைதான் தொடர்கின்றது.

பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கு நோர்வே அனுசரணையாளர்கள் தீவிர முயற்சியெடுத்து வருகின்றார்கள். அரச தரப்பிலிருந்து எந்தச் சாதகமான நிலைப்பாடுகளும் இதுவரை நோர்வே ஊடாக விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்கவில்லை.

நாங்கள் எதிர்வரும் வாரங்களில் நோர்வே வெளிவிவகார அமைச்சர், பிரதி வெளிவிவகார அமைச்சர் போன்ற முக்கியமானவர்களைச் சந்திக்க இருக்கின்றோம். அதன் பின்பு இது தொடர்பான நிலைப்பாடுகளைக் கூறக்கூடியதாக இருக்கும்.

ஹரிம் பீரிஸ் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த முக்கியமானவர்களை சந்தித்த செய்தி மிகவும் தவறானது ஆகும். இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.